பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2032 மார்கழி 11 புதன்கிழமை (26-12-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:31

# இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் நேரடியாகத் தலையிட இந்தியா இணக்கம்

## பெரு வெற்றி எனக் குறிப்பிட்டு மகிழ்கின்றார் அமைச்சர் டிரோன்

கொழும்பு,டிசெம்பர்26

**இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் நேரடியாகத் தலையிட இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது. இது இலங்கை அரசுக்கு மிகப் பெரிய வெற்றி என்று மகிழ்ச்சி தெரிவித்தார். இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ.**

தனியார் தொலைகாட்சி ஒன்றுக்கு நேற்றிரவு அளித்த பேட்டியிலேயே அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டு மகிழ்ச்சியும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மூன்றுநாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா சென்றபோது அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் கூடச் சென்றிருந்தார்.

இந்தியத் தலைவர்களுடன் பிரதமர் ரணில் பேச்சு நடத்திய போது டிரோன் பெர்னாண்டோவும் பெரும்பாலும் உடன் இருந்தார்.

அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ பிரதமருடன் இந்தியா செல்வதற்கு முன்னரே இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்திருந்தார்.

அது சில வட்டாரங்களில் பெரும் சர்ச்சையை எழுப்பியது.

தமது கருத்து பிழையாக ஊடகங்களில் வெளியாகியுள்ளது என்று தெரிவித்து அப்போது நிலைமையைச சமாளித்தார் அவர்.

நேற்று தொலைக்காட்சிப் பேட்டியில் மேலும் கருத்து தெரிவித்த அவர், இனப்பிரச்சினை தொடர்பாக இந்தியத் தலைவர்களும் தாங்களும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் பூரண அமைதி!

கொழும்பு,டிசெ.26

அரசபடையினரும் விடுதலைப் புலிகளும் நேற்று முன்தினம் நள்ளிரவு 12 மணி முதல் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிக்கின்றனர். இதனால் நேற்று பூரண அமைதி நிலவியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நத்தார் தினமான நேற்று வடக்கு-கிழக்கில் எந்தவித தாக்குதல் சம்பவங்களும் இடம்பெறவில்லை. மக்கள் அமைதியாக நத்தார் பண்டிகையைக் கொண்டாடினர்.

யுத்தநிறுத்தம் அமுலுக்கு வந்த பின்னர் எந்தவொரு சம்பவம் குறித்தும் அறிவிக்கப்படவில்லை என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

கொண்டாட்டகாலத்தில் சகல சமூகங்களும் ஒன்றாக - சமாதானமாக - வாழும் சூழ்நிலை உருவாகும் எனப் பாதுகாப்புப்படையினர் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்றும் ஊடகத் தகவல் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

(உ-3)

## பாரிஸிலிருந்து மியாமிக்குப் பறந்த விமானத்தைத் தகர்க்க முயன்றவர் இலங்கையர் அல்லர் என மறுப்பு!



பொலிஸார் வெளியிட்ட ரெய்ட்டின் படம்.

கொழும்பு,டிசெ.26

கடந்த சனியன்று பாரிஸிலிருந்து மியாமிக்குப் பறந்து கொண்டிருந்த 'அமெரிக்கன் ஏயர் லைன்ஸ்' விமானத்தை தமது சப்பாத்துக்களில் பொருத்தப்பட்டிருந்த வெடிகுண்டுகள் மூலம் தகர்ப்பதற்கு முயன்றபோது கைது செய்யப்பட்ட நபர் இலங்கையர் அல்லர்.

- இப்படி மறுப்பு அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருக்கின்றது இலங்கை வெளிவிவகார அமைச்சு.

அமெரிக்கா நீதிமன்றத்தில் இந்தநபர் ஆஜர் செய்யப்பட்ட போது அது தொடர்பான ஆவணங்களில் அவரின் பெயர் ரிச்சர்ட் ரெய்ட் (வயது 28) எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பிரிட்டனில் ஸ்கொட்லண்ட்யார்ட் பொலீஸார் ரிச்சர்ட் ரெய்ட் பிரிட்டன் வாசி என்கின்றனர். ஆனால் அவர் தாரிக் ராஜா என்ற பெயருடைய இலங்கை முஸ்லீம் என்றும் பிரிட்டனின் போலி பாஸ்போட்டை அவர் பயன்படுத்தினார் எனவும் பிரான்ஸ் தரப்பு கூறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)





கிறிஸ்மஸ் தினமான நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஆராதனையின் போது புனித திருத்தந்தை இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் வத்திக்கானின் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மாடத்திலிருந்தவாறு அங்கு கூடியிருந்த மக்களை ஆசீர்வதித்து உரை நிகழ்த்தியபோது எடுக்கப்பட்ட படம் அருகில்.

நள்ளிரவு ஆராதனைக்கு முன்னர் தேவாலயத்துக்கு வருகை தந்த சிறார்களை திருத்தந்தை அரவணைத்து மகிழும் போது எடுக்கப்பட்ட படம் மேலே.

*(செய்தி 11 ஆம் பக்கத்தில்)*

## இடம்பெயர்ந்த மக்களின் நிவாரண விநியோகத்தை கண்காணிக்க குழுக்கள்!

கொழும்பு,டிசெ.26

இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணங்கள் தகுந்த முறையில் விநியோகம் செய்யப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க விசேட குழுக்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் ஜயலத், ஜெயவர்த்தனா இதற்கான பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

நிவாரண விநியோகங்களில் ஒழுங்கீனங்கள் நிலவுவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்த கோரிக்கையை அடுத்தே அமைச்சர் இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார்.

புதிய குழுக்கள் அமைக்கப்பட்ட பின்னர் நிவாரணப் பணிகள் சீராகும் என்று நம்பப்படுகிறது.

(க-3)

## நினைத்தபடி வெளியில் சுற்றித்திரிய முடியாது

# ஆயுதங்களை வைத்திருக்க விரும்பும் குழுக்கள் படை முகாம்களிலேயே தங்கி இருக்கவேண்டும்

யாழ்ப்பாணம்,டிசெ.26

ஆயுதக்குழுக்கள் தொடர்ந்து ஆயுதங்கள் வைத்திருக்க விரும்பினால் அவை இராணுவமுகாம்களிலேயே இராணுவத்தினருடன் தங்கியிருக்க வேண்டும். எங்கும் சுதந்திரமாகத் திரிய முடியாது. தவிரவும் அந்தக் குழுக்கள் இராணுவச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நடக்கவேண்டும்.

இப்படி ஈ.பி.டி.பி. போன்ற ஆயுதக குழுக்களின் தலையில் குண்டைத் தூக்கிப் போட்டிருக்கிறார் புதிய பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

### பாதுகாப்பு அமைச்சர் கூறிய தகவல் இதுதான்

"ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்கள் பறிக்கப்படமாட்டா' என்று லண்டன் பி.பி.ஸியின் 'சந்தேசிய'வுக்கு தாம் கூறிய கருத்தின் தாற்பரியம் இதுதான் என்று அமைச்சர் விளக்கினார்.

சந்தேசியவுக்குத் தாம் வழங்கிய பேட்டியில் இந்தச் சாரப்பட கூறிய கருத்துக்கள் சரிவர ஊடகங்களில் வெளியாகவில்லை என்றும் அவர் கருதுகின்றார்.

யாழ்மாவட்ட எம்பியும் இந்து சமய அமைச்சருமான தி.மகேஸ்வரன், "ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களைத் தொடர்ந்து வைத்திருக்க விடப் போகிறீர்களா?" என்று பாதுகாப்பு அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார். அப்போதே அவர் மகேஸ்வரனுக்கு மேற்கண்ட விளக்கத்தை அளித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயுதக்குழுக்கள் ஆயுதங்களைத் தொடர்ந்து வைத்திருக்க விரும்பினால் அவை இராணுவத்துடன் இணைத்துக் கொள்ளப்படும். அவை சுயாதீனமாகச் செயற்பட முடியாது.

அவை இராணுவ முகாம்களிலேயே தங்கியிருக்க வேண்டும். இராணுவக் கட்டளைக்குப் பணிந்து நடக்க வேண்டும். நினைத்தபடி வெளியே சுதந்திரமாகத் திரியமுடியாது.

நான் இந்த கருத்துப்படவே பி.பி.ஸிக்குப் பேட்டியளித்தேன் - இப்படி அமைச்சர் மகேஸ்வரனுக்கு பாதுகாப்பு அமைச்சர் மாரப்பன தெரிவித்தார்.

அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்.

ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையுமாறு கோரி இந்த கையெழுத்து வேட்டை ஒன்றை நடத்த முயற்சி எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# பிரதேச செயலரின் சிபார்சுடன்தான் இனி விவசாயிகளுக்கு சுடுகலன்கள்!

பிரதேச செயலர்களின் சிபார்சுடனேயே இனி விவசாயிகளுக்குச் சுடுகலன்கள் வழங்கப்படும் என்று வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

அநுராதபுரம் பொலீஸ் நிலையத்தில் நேற்று நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து உரையாற்றுகையில் அவர் இப்படிக் கூறினார்.

கடந்த காலங்களில் ஒழுங்கீனமான முறையில் ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டன. இதனால் சமூகப் பிரச்சினைகள் எழுந்து பெரும் கலவரங்கள் ஏற்பட்டன. எனவே ஆயுத விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகள் சுடுகலனைப் பெறுவதற்கு பிரதேச செயலரிடம் விண்ணப்பிக்க வேண்டும். அந்த விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு அதன் பின்பே சுடுகலன் வழங்கப்படும் - என்று அமைச்சர் தெரிவித்தார். (க-3)

## வாகன விபத்தில் இருவர் பலி!

கொழும்பு,டிசெ.26

சிலாபம், ஆராய்ச்சிக்கட்டுவில் நேற்றுப் பிற்பகல் இரு வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்; 20 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் அறுவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது என்று கொழும்பு தேசிய வைத்தியசாலை தெரிவித்துள்ளது. (க-3)

# கூட்டமைப்பினர் சந்திப்பர்

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் விரைவில் பாதுகாப்பு அமைச்சரையும் வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துப் பேசவிருக்கின்றனர்.

சமாதானத்துக்கு ஏற்ற சூழ்நிலை தற்போது ஏற்பட்டிருக்கிறது. அதை மேலும் செயலாக்கப்படுத்தும் வகையில் எமது சந்திப்பு அமையும் என்றார் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன்.

பேச்சுக்களின்போது நோர்வேயின் மத்தியஸ்தம் உட்பட பல விடயங்கள் கலந்தாலோசிக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (உ)


## கண்ணீர் அஞ்சலி

24.12.2001 அன்று அகால மரணமடைந்த யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலய மாணவனும் உதைபந்தாட்ட வீரனுமான

**சூசைப்பிள்ளை நோபேர்ட்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்.

புனித சாள்ஸ் ம.வி., யாழ்ப்பாணம். (C/19965)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 25 . 02 . 1922



மறைவு 26 . 11 . 2001

**அமரர் செல்லத்துரை கமலம்மா**

(வேலணை)

27.11.2001 ஆம் திகதிய மரணச்சடங்கு இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் -

*இன்று (26.12.2001) புதன்கிழமை* எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திக்கிரியைகளில் தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப்பெறாத உற்றார், உறவினர், நண்பர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*20, அன்னசத்திர ஒழுங்கை,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (96319)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



## நிறைஞ்சனாஸ்
சங்கானை

அமரர் சிவாஜி கணேசனின் ஞாபகார்த்தமாக திரையிடப்பட்டுள்ளது.
சிவாஜி, விஜய், சிம்ரன் நடித்த

**ஒன்ஸ்மோர்**

(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-19779)

## ராஜா யாழ்ப்பாணம்

சில தினங்கள் மட்டும்
விஜய், ரம்பா, தேவயானி மற்றும் பலர் நடித்த

**நினைத்தேன் வந்தாய்**

(ரீல்ஸ்)
தினசரி:- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00 (C/19778)

## நாகம்ஸ் சுன்னாகம்

கமல் (இரட்டை வேடம்),
மனீஷா, ரவீனா
மற்றும் பலர் நடித்த

**ஆளவந்தான்**

காட்சிகள் 11.00, 3.00 (புதிய நேரம்)



## 2ஆம் ஆண்டு நினைவுகளில்...

பாரிடம் 1916 - 01 - 14



பரனிடம் 2000 - 01 - 02

அமரர்

**சின்னத்தம்பி சிவலிங்கம்**

*(பிரபல ரண வைத்தியர்)*

ஈந்திருந்து நீரேகி ஈராண்டு ஆனபோதும்
தூங்குதலோ தானின்றித் துடிக்கின்றோம் துயரத்தில்
கலங்கரை விளக்காய் வாழ்ந்து நீங்கள் மறைந்தாலும்
ஒப்புயர்வற்ற உங்கள் நினைவுகள் எம்முடனே
, என்றென்றும் வாழும்!

***நின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி***

*சிவலிங்கம் வைத்தியசாலை,*
*9/8, 4ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.* (96233)

*உம் பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



# நெஞ்சுவிட்டு நீங்காத மூன்றாவது ஆண்டு நினைவலைகள்



மலர்வு
*பெற்றோர் மகிழ*
**24-01-1948**

உதிர்வு
*மனைவி, மக்கள் கதற*
**26-12-1998**

தமிழர் விடுதலைக் கூட்டணியின்
யாழ்.மாவட்ட முன்னாள் செயலாளர் நாயகமும்,
அனைத்துலக எம்.ஜி.ஆர். பேரவைத் தலைவரும்,
அகில இலங்கை சமாதான நீதிவானும்,
திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும்,
வடபிராந்திய மினிபஸ் சங்க முன்னாள் தலைவருமாகிய

**அமரர்**

**பொன்னுத்துரை மதிமுகராசா (மதி)**

திதி: 26-12-2001 புதன்கிழமை

* அப்பா அப்பா! என்று கதறுகின்றோம் - உங்கள்
செவி தனில் கேட்கவில்லையா?
பாவிகளாய் இருந்து பரிதவிக்கின்றோம் அப்பா!
ஒரு கூண்டில் வாழ்ந்த எம்மை விட்டு - எங்கு
தான் சென்றீர்கள் அப்பா!

* தலைவனுக்கொரு விழா எடுத்த வேளையில்
தமிழ்க் கொடியவன் தான் - உங்கள்
உயிரைப் பறித்தானா? - இல்லை
உடலைத் தான் பறித்தான் அப்பா!
நான்கு "ரவைகள்" தான் - தலையில்
புகுந்தனவோ அந்த "பிஸ்டல்" என்னும்
கொடிய நஞ்சு அப்பா!

* நான்கு செல்வங்களையும் - உங்கள்
தெய்வத்தையும் தவிக்க விட்டு சென்றது ஏனப்பா?
நீங்கள் செல்லவில்லை உங்களை செல்ல
வைத்து விட்டான்கள் தமிழ் அரக்கன்கள் அப்பா!

* எந்த வித பலனையும் எதிர்பாராமல் - இந்த
இனத்துக்காக தமிழ் மண்ணுக்காக
தமிழ் மொழிக்காக அல்லும் பகலும்
பாடுபட்ட ஒரு தலைவன் நீங்கள் தான் அப்பா!
அஞ்சாத நெஞ்சம், தன்மானம் உள்ளவரும்
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கு அப்பா!

* உப்பைப் போல் எளிமையும்
கற்கண்டைப் போல் இனிமையும் ஆனவர் நீங்கள்
- அப்பா!

களம் பல கண்டு
சிறை பல சென்று சொல்லொணாத் துன்பம்
அனுபவித்த தியாகி நீங்கள் அப்பா!
பல ஆண்டு காலம் மோது வாழ்வித்த
சொந்தக்காரர் நீங்கள் அப்பா!

* நேற்று பெய்த மழையில் - இன்று
முளைத்த காளான்கள் அல்ல.
நெருப்பாற்றில் நீந்தி வந்த
மெழுகுவர்த்தி தீபம் நீங்கள் அப்பா!
நீங்கள் இன்றி அரசியல் வாதியில்லை அப்பா!

* தன் குடும்பத்தையும் தன்னையும் கவனியாது
மக்கள் வாழ்வு மலர வேண்டும் - என்பதற்காகத்
தானே பணிகளைச் செய்தீர்கள் அப்பா!
நிராயுத பாணியாய் நின்ற - உங்களைச்
சுட்டது வீரத் தனம் அல்ல - இது
கோழைத் தனம் அப்பா! அப்பா!!

* தன் மானம் இல்லாத தமிழ் அரக்கன்
உங்களைச் சுட்ட அந்த பாவி
கடமை முடிக்கவில்லை அப்பா!
காலன் உங்களை அழைத்துவிட்டான் இல்லை
கணக்கை முடித்து விட்டான் அப்பா! அப்பா!!

(96294)

★ "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"

★ "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு"

★ "நன்மைகள் செய்யத் தாமதம் ஏற்படினும்
இங்கு தீமைகள் நுழைந்து விடக்கூடாது"
எம்.ஜி.ஆர்.

★ "கடல் நீர் ஏன் உப்பானது கடல் கடந்து
வாழ்கின்ற தமிழர்கள் வடிக்கின்ற கண்ணீரால்"
பேரறிஞர் அண்ணா

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நிகழ்வின் இடைவேளையில்! நல்லூரின் வீதியிலே பேசிக்கொண்டு இருந்த அப்பாவுக்கு மாயமாகவே வந்தது எங்கள் குலவிளக்கின் தலையிலே நாலுரவைகள் துளைத்ததுவே.

பிஸ்டல் என்னும் கொடிய நஞ்சே குருதியிலே தோய்ந்தாரே: எங்கள் இதயக்கனி மறைந்தாரோ.

*நல்லவர்கள் வாழ்வதில்லை*
*இது நாநிலத்தின் தீர்ப்பு!*

"அணைந்துவிட்ட எங்கள் குலவிளக்கை இன்னும் நினைப்போம்" என்று வானத்துச் சந்திரனே இவ்வையகத்தில் உலாவிய எம் மாசற்ற அப்பாவை எப்போ காண்போம்!

***உங்கள் ஆத்மா சாந்தியடைய***
***ஈழமண்ணிலிருந்து வணங்குகின்றோம்.***
***உங்கள் பணி தொடரும்...***
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மனைவி:
மதிமுகராசா விஜயலட்சுமி
மகள்மார்:
விஜயமதி, கஸ்தூரிமதி
மகன்மார்:
விஜயகாந்த் (விஜய்)
*(அனைத்துலக எம்.ஜி.ஆர். இளைஞர் அணித் தலைவர்)*
விஜயவர்மன் (வர்மன்)
*(உரிமையாளர் விஜய் வீடியோ சென்ரர்)*

*ஸ்ரீ முருக பவனம்,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

*விஜய் வீடியோ சென்ரர்*
*போட்டோ அன் வீடியோ,*
*தாவடி, கொக்குவில்.*

உதயன்

## விரும்பாத துறையில் கல்வியைத் திணிக்காதீர்!

"பிள்ளைகளின் கல்வி தொடர்பாக அவர்களுக்கு இயற்கையாக இருக்கும் ஆற்றல், பண்பு, திறமை ஆகியவற்றைக் கணக்கில் எடுக்காமல், பெற்றோர் தங்கள் விருப்பு - வெறுப்புகளை ஏதும் அறியா சிறு பிள்ளைகள் மீது திணிப்பது அவர்களது எதிர்காலத்தையே பாழடித்துவிடுகின்றது. பிள்ளைகளை டாக்டராகவும், எஞ்சினியராகவும் படிக்க வைக்கவேண்டும் என்று பெற்றோரின் அடிமனதில் எழும்கனவுகளால் குழந்தைகளின் கல்வியில் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது. குழந்தைகள் தமக்குள் சிந்தித்து, தமது விருப்பங்கள், இயல்புகள், திறமைகள் போன்றவற்றை சுயாதீனமாக வெளிப்படுத்தும் வகையிலான சூழலை உருவாக்குவது அவசியம். இதுவே ஆரம்பக் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டும்."

- இவ்வாறு சுட்டிக்காட்டியிருக்கின்றார் எழுத்தாளரும் மூதறிஞருமான குகஸ்ரீ க.சொக்கலிங்கம் (சொக்கன்).

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப் புடைத்து" என்கின்றார் வள்ளுவர்.

பொய்யாமொழிப் புலவரின் இந்த வாக்குப்படி, ஒருவருக்கு ஒரு பிறப்பில் கற்ற கல்வி எழு பிறப்பிற்கும் துணைபுரியும்; தொடர்ந்துவரும்.

எனவே திருவள்ளுவர் கூற்றுப் படி, ஒரு குழந்தைக்குள்ள கல்வி நாட்டமும், துறைசார்ந்த போக்கும் முந்திய பிறப்பிலிருந்து தொடர்ந்து வரவேண்டும்.

இந்தக் கருத்து உண்மையாகவும் இருக்கலாம் அல்லது பொய்யாகவும் இருக்கலாம்.

ஆனால் 'எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே.' எனினும் அறிவிலும், திறனிலும், நாட்டத்திலும் குழந்தைக்குக் குழந்தை வேறுபாடுகள் உண்டு. இயற்கையான ஈடுபாடும், ஆர்வமும், துறைசார் நாட்டமும் குழந்தைக்குக் குழந்தை வித்தியாசப்படும்.

எனவே அவர்களின் இயல்பான தன்மைக்கும், விருப்பத்திற்கும், ஈடுபாட்டிற்கும், ஆளுமைக்கும் ஏற்பவே அவர்களின் கல்விசார்போக்கு அமையவேண்டும். பெற்றோரின் விருப்பத்திற்கும் கனவுகளுக்கும் அமையவல்ல.

தமது பிள்ளைகளின் திறமை மற்றும் இயல்புகளைக் கணக்கில் எடுக்காது தமது விருப்பு, வெறுப்புகளைப் பிள்ளைகள் மீது திணிக்கும் பெற்றோரால் அந்தப் பிள்ளைகளின் எதிர்காலம் பாழடிக்கப்படுகின்றது.

கல்வியின் அடிப்படை வெளியில் இருந்து வருவதில்லை. அதற்கான வளமான சூழ்நிலை உள்ளத்தில் இருந்துதான் வருகின்றது. எனவேதான் பிள்ளைகள் தங்கள் உள்ளத்திற்குள்ளேயே சுதந்திரமாகச் சிந்திக்கக் கூடிய நல்லதொரு சூழலை ஏற்படுத்தி அவர்களின் விருப்பத்திற்கேற்ப கல்வியினை முன்னெடுக்க வேண்டும் என வற்புறுத்துகின்றார் அறிஞர் சொக்கன்.

பிள்ளைகள் விரும்பும் துறையில் அவர்களைக் கல்வி கற்க விட வேண்டும். அதேசமயம் விளையாட்டு, உலக அறிவியல் ஆகிய துறைகளில் தேர்ந்தவர்களாகவும் சிறந்த சிந்தனை உடையவர்களாகவும் ஒழுக்கமுள்ள பண்பாளனாகவும் பிள்ளைகளை வளர்ப்பது அவசியம் என்று அவர் கூறுவதிலும் அர்த்தம் உள்ளது.

நமது பெற்றோர்களோ பிள்ளைகளின் நல்லொழுக்கம், பண்பு, பழக்கவழக்கம் ஆகியவை குறித்து சிந்திக்காமல் தத்தமது விருப்பத்திற்கு ஏற்ற துறையிலான கல்வியை அவர்கள் மீது திணிப்பதில்தான் நாட்டம் காட்டுகின்றார்கள்.

இந்நிலை மாறினால்தான் நமது சிறார்களின் எதிர்காலம் சிறக்கும்; சமூகம் லாபம்பெறும்.

சிறுவர்களை அவர்கள் விரும்பும் - அவர்களுக்கு அடிப்படைத் திறமையுள்ள - துறையில் கல்வியைத் தொடரவிடுவதன் மூலம் - தூண்டுவதன் வாயிலாக - அவர்களையும் உயர்ந்த தரத்துக்கு உயர்த்தமுடியும்.

### தனியார் வாகனங்களுக்கு அனுமதி இல்லாததால்

# யாழ். - மிருசுவில் பஸ் சேவையை அதிகரிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டி வீதி வழியே மிருசுவில் வரை மேற்கொள்ளப்படும் 769 ஆம் இலக்க பஸ் சேவையை அதிகரிக்குமாறு தென்மராட்சி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது இந்த மார்க்கத்தில் இரண்டு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன. இதனால் பஸ்ஸிற்காக பல மணிநேரம் பயணிகள் வீதியில் காத்துநிற்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

தற்போதைய சுமுக நிலையைப் பயன்படுத்தி இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் தமது வீடுகளைப் பார்வையிடவும், அப் பகுதியில் குடியமரவும் சென்று வருவதனால் இப்பாதையில் சேவையாற்றும் பஸ்களில் சன நெரிசல் மிக அதிகமாக இருப்பதாகவும், இதனால் பஸ்ஸுக்காக காத்திருக்கும் பலர் பஸ்ஸில் ஏற்றப்படாமல் இடைவழியில் தவிக்கவிடப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பாதையில் தனியார் வாகனங்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படாததனால் பொதுமக்கள் தமது பயணத்தேவைக்கு போக்குவரத்துச் சபை பஸ்களையே முழுமையாக நம்பியுள்ளனர். இதனால் மிருசுவிலுக்கான சேவை அதிகரிப்பை விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தென்மராட்சி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை காலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் செல்லும் முதலாவது பஸ் சேவையை முன்னரைப்போல் மீண்டும் மிருசுவில் வரை நீடிக்க வேண்டும் எனவும் அப பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.(க-15)

## கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. ஆசிரியருக்கு!

யாழ்ப்பாணம்,டிசெ.26

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய ஆசிரியர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி கிறிஸ்ரல் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளதாகவும் -

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் -

வித்தியாலய அதிபர் த.கந்தையா கேட்டுள்ளார். (ஒ)

## நாட்டு நடப்பு

### தாபரிக்க யாரே உள்ளார்?

கையிலே ஒரு குழந்தை
காலடியில் மற்றதொன்று
பையவே பின்னால் ஒன்று
பரிதவித்து அலறி ஓட
தையலாள் கோட்டில் ஏறி
தாபரிப்புக் கோரி நின்று
"ஐயா! அவன் என்னை விட்டு
அம்பிகாவோடு ஓடிவிட்டான்.
மெய்யாக நஞ்சை ஊட்டி
மெதுவாகக் கொல்லப்போறேன்
தெய்வமே! எனக்கு தாபரிப்புத்
தாரும்" என்று இறைஞ்சுவாளை
கையிலே பிடி விறாந்தைத் தந்து
காட்டென ஜட்ஜும் கூற
"மைவிழி அம்பிகாவோடு
மகவொன்று பெற்று விட்டு
பையவே கப்பல் ஏறி
பாஸின்றி சென்றான்" என்றாள்.

- *விகடகவி.*

### நித்திய பூசைகளுக்காக

# மாவை, கீரிமலை கோயில்களுக்கு சென்றுவர ஏற்பாடு செய்யுங்கள்!

### அமைச்சர் மகேஸ்வரனிடம் சிவமகாராஜா கோரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.26

"மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை சிவன்கோயில் போன்றவற்றுக்கு மக்கள் தடையின்றிச் சென்று வழிபட தகுந்த நடவடிக்கை எடுங்கள்."

- இவ்வாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனைக் கோரியிருக்கின்றார் யாழ்மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராஜா.

இது தொடர்பாக அமைச்சர் தி. மகேஸ்வரனுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தாங்கள் மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயத்துக்கு விஜயம் செய்து, ஆலயத் திருத்தவேலைகளை மேற்கொள்ளவும், சைவமக்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபாடு மேற்கொள்ளவும் வழிவகைகள் மேற்கொண்டமையை அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

அதுபோல வடபகுதியில் சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை சிவன் கோயில்களையும் சைவமக்கள் சென்று வழிபடவும், நித்திய பூசைகள் முறைப்படி நடைபெறவும் உள்ள தடைகள் நீக்கப்பட நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரசித்திபெற்ற புனித தலங்களான மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய தலங்கள் உட்பட வலிகாமம் வடக்கு பிரதேச மக்கள் மீளக்குடியமர வழி வகைகள் மேற்கொள்ளப்படவேண்டும். மக்கள் மீளக்குடியமராமல் கோயில் பூசை வழிபாடுகளை ஒழுங்காகவும், கிரமமாகவும் மேற்கொள்ளமுடியாது. ஆகவே மக்களையும் மீளக் குடியமர அனுமதிக்கவேண்டும்.

இதற்கான நடவடிக்கைகளை தாங்கள் மேற்கொண்டு, கூடியவிரைவில் சைவமக்களின் நீண்டகாலமாக உள்ள மனக்குறையைத் தீர்க்கவேண்டும்.

அதுமட்டுமன்றி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை சிவன கோயில் திருத்தவேலைகள் போதிய நிதி ஒதுக்கப்படாமையால் பூர்த்தியடையாத நிலையில் இருக்கின்றன. இதற்குத் தேவையான நிதியை ஒதுக்கிக் கொடுத்து புனருத்தாரண பணிகளை விரைவாகப் பூர்த்தி செய்து, கும்பாபிஷேகம் விரைவில் நடைபெற ஆவன செய்துதருமாறு கோருகின்றோம். கீரிமலையில் சைவமக்கள் தமது இறந்தவர்களின் இறுதிகடன்களை நிறைவேற்றி வருவது வழக்கம். அந்தக் கருமம் செய்வதற்காக மக்கள் அங்கு செல்லவும் வழிவகை ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

மாவிட்டபுரம், கீரிமலை ஆகிய தலங்களுக்கு மக்கள் தடையின்றித் தினந்தோறும் செல்ல வசதியாகப் போக்குவரத்துச் சேவை நடத்தப்பட வேண்டும். இறுதியாக வலிகாமம் வடக்கு மக்கள் எதிர்நோக்கும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து போன்ற அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து உதவுமாறு வேண்டுகின்றோம் - என்று உள்ளது. (உ)

## துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

தென்மராட்சிப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறி நேற்றுமுன்தினம் இரவு அடையாளம் காணப்படாத இளைஞர் ஒருவரின் சடலம் கொடிகாமப் பொலீஸாரால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்படும் இந்தச் சடலம், அடையாளம் காணும்பொருட்டு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றில் இவர் உயிரிழந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (க-6-139-15)

# பருத்தித்துறை ஓடக்கரை மக்கள் வெள்ளத்தால் பெரிதும் பாதிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.26

கடந்த வெள்ளிக்கிழமை பெய்த பெருமழை, வெள்ளப்பெருக்கினால் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள தாழ்நிலக் குடியிருப்புகள் பல வெள்ளத்தில் மூழ்கின. மக்கள் தம் சொந்த வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளிலும், கோயில்களிலும் தஞ்சமடைந்திருந்தனர்.

ஓடக்கரையில் வெள்ளத்தில் மூழ்கிய குடியிருப்புக்களில் உள்ள பல குடும்பங்களுக்கு, ஓடக்கரை சனசமூக நிலையத்தின் ஒத்துழைப்புடன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளை சமைத்த உணவை வழங்கி உதவியளித்தது.

பலவருடங்களாக திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படாததால், வெள்ளம் வடிந்து ஓடாமல் தேங்கிநின்றது. அதையடுத்து வெள்ளவாய்க்காலில் மூடிக்கிடந்த தடைகள் அகற்றப்பட்டன. அதன்பின்னர் வெள்ளம் வடிந்தோடியதைத் தொடர்ந்து மக்கள் தம் குடியிருப்புகளுக்குத் திரும்பினர்.

செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைக் கிளைத் தலைவர் கூ.தவராசாவின் தலைமையிலான தொண்டர்களும், ஓடக்கரை சனசமூக நிலைய அங்கத்துவ இளைஞர்கள் சிலரும் சேர்ந்து பெருமழையையும் பொருட்படுத்தாது வெள்ளத்தில் இறங்கித் தடைகளை அகற்றும் பணியை மேற்கொண்டனர்.

பிரதேச செயலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க அப்பகுதி மக்கள் தமது அழிவுகள் பற்றிய விபரங்களை, கிராம அலுவலிடம் எழுத்து மூலம் கொடுத்து வருகின்றனர்.

வெள்ளம் புகுந்த பல வீடுகளின் சுவர்கள் இடிந்துவீழ்ந்துள்ளன. ஆடுகள், கோழிகள் இறந்துள்ளன. அத்துடன் வேறு சேதங்களும் ஏற்பட்டுள்ளன. (க-15)

## சிவசிதம்பரம் நாடு திரும்புகிறார்

கொழும்பு,டிசெ.26

தமிழ் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் இரண்டொரு தினங்களில் தமிழகத்திலிருந்து தாயகம் திரும்புகின்றார்

அவர் தேசியப்பட்டியல் எம்.பியாக நாடாளுமன்றம் செல்லவுள்ளார்.(உ)

# மந்திகை ஆஸ்பத்திரியின் எக்ஸ்-ரே பிரிவு ஸ்தம்பிதம்

### தொழில்நுட்ப ஊழியர் பற்றாக்குறையால்

யாழ்ப்பாணம்,டிசெ.26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் எக்ஸ்-ரே பிரிவில் தொழில நுட்பவியலாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் எக்ஸ்-ரே எடுக்கப்பட வேண்டிய நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் எக்ஸ்-ரே பிரிவில் கடமையாற்றிய ஊழியர்கள் நோய்வாய்ப்பட்டு விடுமுறையில் உள்ளதால் அந்த இடத்தை நிரப்புவதற்கு பருத்தித்துறை வைத்தியசாலையின் எக்ஸ்-ரே பிரிவில் கடமையாற்றிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் தற்காலிகமாக யாழ்.வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதனையடுத்து இந்த ஆஸ்பத்திரியில் இயங்கும் எக்ஸ்-ரே பிரிவு சீராக இயங்கமுடியாதுள்ளது. இதனால் இந்த வைத்தியசாலையில் சிகிச்சைக்காக எக்ஸ்ரே எடுக்கப்பட வேண்டிய நோயாளர்களை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வர வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-6-15)

## நாளை

மார்கழி 12
வியாழக்கிழமை
திதி : துவாதசி
மாலை 6.43 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பின்னிரவு 2.26 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 7.57 - 9.27
ராகுகாலம் : 1.57 - 3.27
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

துணிச்சலான, புதுமையான ஆரம்பம் என்பதே வெற்றியை பாதிதூரம் நெருங்கிவிட்டமாதிரித்தான்.

### வடமராட்சிப் பகுதியில் உள்ள

# அகதி முகாம்களில் வாழும் மக்கள் தொடர்ச்சியான மழையால் அவதி!

தென்மராட்சி,டிசெ.26

வடமராட்சிப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழையினால் வெள்ளம் அனைத்து இடங்களிலும் தேங்கி நிற்பதால் மக்கள் பெரும கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இடம்பெயர்ந்தோர் முகாம்களில் உள்ள பலவீடுகள் வெள்ளத்தால் மூழகியுள்ளன. இதனால் இவ்வீடுகளில் தங்கியிருந்த மக்கள் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கரவெட்டி தோலில்சந்தைப் பகுதி முகாம்களில் தங்கியிருந்த மக்கள் கடைவேலி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், அங்கு அமைக்கப்பட்ட சாவகச்சேரி மகளிர் கல்லூரி, பளை றோ.க.த.க. பாடசாலையிலும், துன்னாலை மெற்கு முகாமில் தங்கியிருந்த மக்கள் கரவெட்டி ஞானசாரியார் கலலூரியிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இப் பாடசாலைகளில் தங்கியுள்ளவர்களுக்கு அந்தந்தப் பகுதி மக்களும் பொதுஅமைப்புக்களும் உணவை வழங்கிவருகின்றனர். (க-117)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய (Baby Fridge) மற்றும் Olmpiya English தட்டச்சு இயந்திரம் (Portable) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: நா. கிருஸணதாசன், ஆறுமுகம் லேன், 3ஆம் கட்டை, கல்வியங்காடு. (96252)

### இறைச்சிக்கோழி விற்பனை

இறைச்சிக்கோழிகள், புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.227, பிறவுண் வீதி (கலட்டிச் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (96260)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள விற்பனைக்கு உண்டு. இலவசமாகச் சுத்தம் செய்து கொடுக்கப்படும். Y.A.சுரேஸ், கிராமக் கோட்டடி, எரிபொருள் நிலைய முன் வீதி, (200M உள்ளே) பருத்தித்துறை. (96296)

புறொயிலர், கல்பேட்ஸ் சேவல் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி.
T.P. 3529, 2867. (96295)

### வகுப்புகள்

தமிழ், தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கிலத் தட்டெழுத்து வகுப்புகள் நாளை (27-12-2001) வியாழக்கிழமை ஆரம்பமாகும். தொடர்பு: இல.5, அம்மன் வீதி, (வைரவர் கோயில் முன்பாக) கந்தர்மடம், யாழ்ப்பாணம். (96267)

### யுவதியைக் காணோம்

கடந்த 18ஆம் திகதி வீட்டிலிருந்து புறப்பட்ட 22 வயது யுவதி நேற்று வரை வீடு திரும்பவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

மீசாலையைச் சேர்ந்த சூசப்பிள்ளை சங்கீதா என்பவரே காணாமற் போய் உள்ளவராவார்.

இடம்பெயர்வின் பின்னர் புத்தூரில தாம் தங்கியிருந்ததாகவும்-

கடந்த 18ஆம் திகதி பிற்பகல் 2மணிக்கு கோண்டாவிலுக்குச் சென்றதாகவும்-

அவர் வீடு திரும்பாததால் அங்கு தேடிச் சென்றபோது அவர் தமது வீட்டுக்கு வரவில்லை என்று அவர்களால் தெரிவிக்கப்பட்டதாகவும-

அவரது பெற்றோர் அச்சுவேலி பொலீஸ் நிலையத்திலும், நெல்லியடி ஈ.பி.டி.பி. அலுவலகத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர். (ம-117)

### சமயப் பெரியோர் கௌரவிப்பு!

மானிப்பாய் வட்ட ஸயன்ஸ் கழகத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 10 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் சமயப் பெரியோர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

ஆதரவற்றவர்களுக்கு அர்பணிப்புடன் சேவையாற்றி வரும் சமயப் பெரியோர்களின் சேவையை இந்த நிகழ்வில் நினைவுகூர்ந்து பாராட்டுவதுடன் -

புதுவருடத்தில் நீதியையும் சமாதானத்தையும் வேண்டி வரவேற்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளதாக அறிவிககப்பட்டுள்ளது. (ம-6-139)

### அதிக பெறுமதியான முத்திரைகள் வந்தன

யாழ்.பிரதம தபாலகத்திற்கு ஆயிரம் ரூபா மற்றும் 500ரூபா பெறுமதியான முத்திரைகள் எடுத்து வரப்பட்டுள்ளதாக பிரதம தபாலதிபர் தெரிவித்தார்.

பெறுமதி வாய்ந்த முத்திரைகளை இன்று தொடக்கம் யாழ்.பிரதம தபாலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும எனவும அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-6)

### உடுபுடைவைகள் அன்பளிப்பு

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி வடமராட்சிக் கிழக்கு ஆகிய பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தினால் உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவில் உள்ளவர்களால் சேகரிக்கப்பட்ட இந்த உடுபுடைவைகள் சேவாச்சிரமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகச் சேவாச்சிரமத் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா தெரிவித்தார். (ம-117)

---

உ
குகமயம்
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை
நடத்தும்

## வருடாந்த திருவாசக விழா - 2001

காலம் :- 28-12-2001 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி.
இடம் :- சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச் சந்நிதி.

அருளுரை :- நல்லை ஆதீன குரு முதல்வா
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

சிறப்புரை :- ஞானபண்டித சேவாசுரபி Dr.சி.கதிரவேற்பிள்ளை
இளைப்பாறிய உதவி அரச அதிபர் சி.முருகேசம்பிள்ளை J.P.

மலர் வெளியீடு:- மாதாந்த ஞானச்சுடர் மலருக்கான மதிப்புரையை காரை செ.சுந்தரம்பிள்ளை அவர்கள் நிகழ்த்துவார்கள்.

மாணவர் நிகழ்வு:- போட்டியில் பங்குபற்றிய மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும், தொடர்ந்து பரிசளிப்பும் இடம்பெறும்.

குறிப்பு:- *ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் விஷேட அபிஷேகத்தைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும், திருவாசக ஏடுகளும் ஆச்சிரமத்திற்கு ஊர்வலமாக எடுத்துவரப்படும்.*

***அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.***

(C/19959)

ச.ஆ.சை.க.ப.பேரவை,
தொண்டமனாறு.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது விவசாய சம்மேளனச் செயலாளர்
திரு.முத்தையா சுந்தரலிங்கம்
அவர்களின் அன்பு மனைவியார்

### திருமதி விமலாதேவி (சின்னமணி)

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பித்து பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அமரரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

(96293)

கமநல சேவை நிலையமும்,
உரும்பிராய் விவசாய சம்மேளனமும.

*உரும்பிராய் கிழக்கு.*

---

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
07 - 05 - 1932



உதிர்வு
07 - 12 - 2010

### அமரர் முருகன் சன்னதி

திதி: 26-12-2001

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஓராண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள்
மனதை விட்டு ஒரு போதும் நீங்காது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவகலாத,
அம்மா, மகன், மகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*மாயக்கை, பட்டியோடை,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

(96300)

---

## ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
28 - 02 - 1947



மறைவு
13 - 12 - 1999

### அமரர் சிவசுப்பிரமணியம் சிவகுமாரன்

(ஆசிரியர், தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை)

திதி:- 26-12-2001

***ஆண்டிரண்டு சென்றாலும் அன்பு முகம் மாறுமோ? கருணையின் வடிவமே பாசத்தின் இருப்பிடமே! எப்போது உங்கள் முகம் காண்போம்? எப்போது உங்கள் குரல் கேட்போம்? என்றும் எங்கள் மனதை விட்டு அகலாத எங்கள் அன்புத் தந்தையே! குடும்ப ஒளிச் சுடரே! தெய்வமே! எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி வைகுண்ட ஏகாதசித் திதியில் இறையடி சேர்ந்த அன்பு அப்பாவே! ஈராண்டு அல்ல பல்லாண்டுகள் சென்றாலும் உங்கள் பாச நினைவுகள், அன்பு உள்ளம் என்றும் எங்கள் நெஞ்சங்களில் நீங்காது.***

*தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:*

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

*'தனபதி'*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

(96276)

---

## நீங்கா நினைவில் ஆறாண்டு

அன்னை மடியில்
12 - 02 - 1968



சுவர்க்க வாயில்
01 - 01 - 1996

### குணபாலசிங்கம் கிருபாகர் (G.K.)

(விவசாயப் பொருளியல் இறுதியாண்டு மாணவன் - யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம்)

திதி:- சுவர்க்கவாயில் ஏகாதசி - 26-12-2001

*உமது உள்ளமே நீர்*
*உமது உள்ளம் என்றென்றும் எமது உள்ளத்தில் - நிறைந்திருக்கும்.*

அம்மா, அக்கா,
அண்ணா, அண்ணி

*அண்ணா*
*கு.சாந்தமோகன் (கிராம அலுவலர்),*
*கொக்குவில்.*

(96297)

---

## 45ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு
1965 - 06 - 04



இறப்பு
2001 - 11 - 12

### திருமதி சிவயோகவதி குமாரசாமி

பிறப்பிடம்:- மிருசுவில் வடக்கு
வசிப்பிடம்:- மாலுசந்தி, அல்வாய் தெற்கு

"கண்மூடி விழிப்பதற்குள் கதை முடிந்து போனதன்றோ!
அன்புடனும் பண்புடனும் பேசிய இன் சொற்கள் எங்கே?
அழகுத் திருமுகத்தில் அரும்பும் புன்சிரிப்பைக் காண முடியுமோ?
எம்மை யெல்லாம் தவிக்கவிட்டு எங்குதான் சென்றுவிட்டீரோ?
உங்களுடன் பழகிய நாள்கள் நெஞ்சில் நிறைந்து நிற்கின்றன!
நீர்தந்த மழலையின் முகத்தில் நின் மதிமுகமே ஒளிவீசிப் பிரகாசிக்கின்றது."

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பிரிவால் துயருறும்:*
ந.பிரபாகரன், ந.ரவிச்சந்திரன்.

*மாலுசந்தி,*
*ஸ்ரீ காமாட்சி அம்மன் வீதி,*
*அல்வாய் தெற்கு, அல்வாய்.*

(96275)

---

## மரண அறிவித்தல்கள்

### கந்தப்பு சின்னையா

வரணி, இடைக்குறிச்சியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு சின்னையா நேற்று (25-12-2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னப்பிள்ளையின் அன்புக்கணவரும், காங்கேசு, இராசலட்சுமி, பரமேஸ்வரி, கந்தசாமி, நடராசா, செல்வநாயகம், செல்வராசா, ஸ்ரீபாலகிருஷ்ணபிள்ளை (யா/இடைக்குறிச்சி, ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய - ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25-12-2001) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆசிரியர் S.ஸ்ரீ (மகன்)

*இடைக்குறிச்சி,*
*வரணி.*

(96290)

### திருமதி நல்லையா சின்னம்மா (தங்கம்)

மண்கும்பான் கிழக்கு, நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நல்லையா சின்னம்மா (தங்கம்) 23-12-2001 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மண்கும்பான் கிழக்கு, நாலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட வீரகத்திப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் சமாதானநீதவான் நல்லையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூமணி, சுப்பிரமணியம், கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நாகபூசணி, செல்லப்பாக்கியம் (அலெக்சாண்டர் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை) காலஞ்சென்ற குணரத்தினம் மற்றும் மங்களேஸ்வரன் (கொழும்பு), செல்வராணி (வன்னி), சிவகுமார் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்லையா (காலஞ்சென்ற சுந்தரலிங்கம்), தவநாயகம், உதயகுமாரி, தர்ஷினி ஆகியோரின் மாமியாரும் தனபாலசிங்கம், வளர்மதி (கொழும்பு), யோகமூர்த்தி மைதிலி (ஜேர்மனி), செந்தில்க்கண்ணன் (லண்டன்), செந்தில்க்கிருஷ்ணா (கொழும்பு), சுரேஸ் அம்பிகா (கொழும்பு), காயத்திரி, தர்ஷிகா, ராஜி (கொழும்பு), தவப்பிரியா, ஜெயப்பிரியா, கோபிக்கிருஷ்ணா, முரளீதரன் (வன்னி), சீமோன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் சிந்து, ரஜீவன், திவ்வியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் (இன்று (26.12.2001) புதன்கிழமை நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் சாட்டி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வீ.கந்தையா (தம்பி)

மண்கும்பான் கிழக்கு,
4ஆம் வட்டாரம்.

(96298)

# முன்னாள் தலிபான் தூதுவர் பாகிஸ்தானில் அரசியல் தஞ்சம்

இஸ்லாமாபாத்,டிசெ.26

பாகிஸ்தானுக்கான தலிபான்களின் முன்னாள் தூதுவர் முல்லா அப்துல் சலாம் சயீவ் பாகிஸ்



தானில் அரசியல் புகலிடம் கோரியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியில் இருந்தபோது வெளியுலகத்துடன் தலிபான்களுக்கான தொடர்பாளராக இருந்தவர் முல்லா அப்துல சலீம். பாகிஸ்தானில் இயங்கிவந்த ஆப்கான் தூதரகத்தில் தலிபான் பிரதிநிதியாக இவர் பணிபுரிந்து வந்தார். தலிபான்கள் தொடர்பான செய்திகளை வெளியுலகுக்கு தெரிவித்து வந்தவரும் இவரே.

அமெரிக்கத் தாக்குதல்களால் ஆப்கானிஸ்தானின் ஆட்சிபீடத்தில் இருந்து தலிபான்கள் அகற்றப்பட்ட பின்னர் பாகிஸ்தானில் இருந்த தலிபான் தூதரகத்தைப் பாகிஸ்தான் மூடிவிட்டது.

இதனை அடுத்து சிறிது காலம் பாகிஸ்தானில் தங்கியிருந்த முல்லா அப்துல் சலீம், தற்போது பாகிஸ்தானில் நிரந்தரமாகத் தங்கிவிடுவதற்காக அரசியல் தஞ்சம்கோரி உள்ளார். "நான் தஞ்சம்கோரி விண்ணப்பித்துள்ளேன். தற்போது பாகிஸ்தானிய அரசின் பதிலுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன்" - என்று முல்லா அப்துல் சலீம் கூறினார்.

"என்னுடைய நாட்டுக்குத் திரும்பிச் செல்வதற்கான சரியான சந்தர்ப்பம் இதுவல்லவென்று நான் கருதுகின்றேன்" - என்றும் அவர் சொன்னார். (ம)

# பெத்தலகேம் பயணித்த அரபாத் இஸ்ரேலியப்படையால் மறிப்பு!

ஜெருஸலேம்,டிசெ.26



இயேசுபிரான் பிறந்த ஊரான பெத்தலகேமில் இடம்பெற்ற நத்தார் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளச் சென்ற பலஸ்தீனத் தலைவர் யஸர் அரபாத்தை இஸ்ரேலியப் படைகள் தடுத்து நிறுத்தின. இதனால் கடந்த 7 வருடங்களில் முதல் முறையாக பெத்தலகேம் நத்தார் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ள முடியாமல் அவர் ரமலா நகரம் திரும்பினார்.

1995ஆம் ஆண்டு இஸ்ரேலுடனான இடைக்கால அமைதி ஒப்பந்தத்தின்படி பெத்தலகேம் நகரம், பலஸ்தீன அதிகார சபை ஆட்சியின் கீழ் வந்தது. அதன் பின்னர் ஒவ்வொரு ஆண்டும், மத நல்லிணக்கத்தைப் பேண இஸ்லாமியப் பலஸ்தீனரான யஸீர் அரபாத் கிறிஸ்தவப் பண்டிகையான நத்தாரின்போது பெத்தலகேம் சென்று வந்தார்.

இஸ்ரேலிய அமைச்சர் ஒருவரின் கொலையில் சம்பந்தப்பட்ட பலஸ்தீனர்களை அரபாத் கைது செய்தால், அவர் பெத்தலகேம் செல்ல அனுமதிக்கப்படுவார் என்று இஸ்ரேல் அறிவித்திருந்தது. இந்தத் தடையை மீறி பெத்தலகேம் சென்ற அரபாத், இஸ்ரேலியப் படையினரால் வழியில் தடுத்து மடக்கப்பட்டார். இதனையடுத்து அவர் ரமலா திரும்பியதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## இந்தோனேஷிய ரயில் விபத்தில் 27பேர் பலி!

இந்தோனேஷியாவில் நேற்று அதிகாலை இடம்பெற்ற ரயில் விபத்தில் 27பேர் வரை உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

மத்திய ஜாவா பகுதியில் சிக்னலுக்காக சரக்கு ரயில் ஒன்று நின்றுகொண்டிருந்ததாகவும் -

அப்போது, அதே தண்டவாளத்தில் வேகமாக வந்த பயணிகள் ரயில், நின்றுகொண்டிருந்த சரக்கு ரயிலுடன் நேருக்கு நேராக மோதியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஜகார்த்தாவுக்கு கிழக்கே 280 கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள பிரேபஸ் என்ற இடத்திலுள்ள சிறிய ரயில் நிலையம் ஒன்றில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருபவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது. (ஒ)

# நுரையீரல் நோயால் பீடிக்கப்பட்டு ஒஸாமா பின்லேடன் இயற்கையாக மரணம்! உடனிருந்த தலிபான் தலைவர் தெரிவிப்பு

## கட்டுக்கதை என்கிறது அமெரிக்கா

காபூல்,டிசெ.26

ஆப்கானிஸ்தானின் தோராபோரா மலைக் குகையொன்றில் ஒஸாமா பின்லேடன் நோய்வாய்ப்பட்டு இயற்கை



மரணமடைந்துவிட்டார்.

- இவ்வாறு தலிபான் தலைவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வான் தாக்குதலையடுத்து, பின்லேடன் மற்றும் அவரது குடும்பத்தினர், அல்கெய்டா மெய்ப் பாதுகாவலர்கள் ஆகியோர் தோரா போரா மலைக்குகையொன்றில் தஞ்சமடைந்திருந்ததாக அந்தத் தளபதி கூறியுள்ளார்.

அமெரிக்கக் கூட்டுப்படையிடம் பிடிபட்டுள்ள இந்தத் தலிபான் தளபதி, தோரா போரா குகையில் பின்லேடனுடன் தானும் தங்கியிருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

நுரையீரல் நோயால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் -

அமெரிக்கத் தாக்குதலின் மத்தியில் போதுமான சிகிச்சை வசதிகள் இல்லாததால், அவர் தோரா போரா மலைப் பிரதேசத்திலேயே இயற்கை மரணம் அடைந்துவிட்டதாகவும் -

தலிபான் தளபதி மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

"பின்லேடன் கடைசியாகப் பதுங்கியிருந்த பகுதியில் அவருடைய சமய நம்பிக்கைக்கு ஏற்றவாறு இறுதிச்சடங்கு நடைபெற்றது. அதில் நானும் கலந்துகொண்டேன். பின்லேடனின் குடும்பத்தினர், அவரது மெய்ப் பாதுகாவலர்கள், அவரது நம்பிக்கைக்குரிய நண்பர்கள் என்று சுமார் 30 பேர் வரை இறுதிச்சடங்குகளில் கலந்துகொண்டனர். பின்லேடனின் உடலை அடக்கம் செய்வதற்கு முன்னர் இறுதியாகப் பார்த்தேன். அவரது முகம் மிக அமைதியாகவும், தன்னம்பிக்கை நிறைந்ததாகவும் காணப்பட்டது."

- இவ்வாறு அந்தத் தலிபான் தலைவர் கூறியுள்ளார்.

ஆனால் இவரது சொற்கள் நம்பக்கூடியதாக இல்லை என்று ஆப்கானில் உள்ள அமெரிக்கப் படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

பின்லேடன் இறந்துவிட்டதாகக் கூறி, அவரைத் தேடும் பணிகளை நிறுத்தும் தந்திரமாகவே குறிப்பிட்ட தலிபான் தலைவரின் வார்த்தைகளைத் தாம் கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ)



ஆப்கானிஸ்தானில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் பிரிட்டிஷ் படைவீரர் ஈடுபடுவதையும், அதனைச் சில ஆப்கானியர்கள் நோட்டமிடுவதையும் படத்தில் காணலாம்.

## இந்தியாவில் புதிய நோட்டு அறிமுகம்

புதுடில்லி,டிசெ.26

இந்தியாவில் ஆயிரம் ரூபா நோட்டுக்கள் புதிய வடிவமைப்பில் வெளியிடப்படவுள்ளன.

புதிய ஆயிரம் ரூபா நோட்டுக்களை வங்கிகள் ஊடாக வெளியிடுவதன் மூலம் கள்ளநோட்டுப் புழக்கத்தை கட்டுப்படுத்தமுடியுமென்று நம்புவதாகவும் -

ரிசேவ் வங்கி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

# எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி படைகளை நகர்த்துகிறது பாகிஸ்தான்; எதற்கும் தயார் என்கிறது இந்திய அரசு!

## உபகண்டத்தைச் சூழும் போர் மேகங்கள்

இஸ்லாமாபாத்,டிசெ.26

பாகிஸ்தான் இராணுவ ஆயத்த நடவடிக்கையில் ஒரு பகுதியாகத் தனது இராணுவம், விமானப் படை, கடற்படை ஆகியவற்றை இந்திய எல்லைகளை நோக்கி பெருமளவில் நகர்த்தி வருகிறது.

விடுமுறையில் சென்றுள்ள தனது வீரர்களை உடனே பணிக்குத் திரும்புமாறு பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது. பாகிஸ்தானிய இராணுவ அமைப்பின் படைத்தலைவர்களின் கூட்டுக் கூட்டம் இஸ்லாமாபாத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதற்கிடையில் தனது சீன விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பும் சமயத்தில் பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் பெருமளவு ஆயுத உதவியை சீன அரசிடம் கோரியிருப்பதாகக் கூறப்படுகிறது.

எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் மேற்கொண்டுவரும் போர் ஆயத்தங்களை அடுத்து, இந்தியாவும் தனது படையணிகளை அனுப்பி வருகிறது.

தற்போது சியாச்சினில் உள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் எந்தப் பின் விளைவுகளையும் சந்திக்க இந்தியா தயாராக இருப்பதாகவும் -

இதுபோன்ற சவால்களை இந்தியா பல தடவைகள் வெற்றிகரமாக எதிர்கொண்டதாகவும் -

தெரிவித்தார்.

மேற்கு எல்லையின் முன்னரங்கப் பகுதியிலுள்ள தனது வீரர்களின் விடுமுறைகளை இந்திய இராணுவம் ரத்துச் செய்துள்ளது.

இந்திய நாடாளுமன்றத் தாக்குதலில் ஈடுபட்ட காஷ்மீர்த் தீவிரவாத அமைப்புக்களின் வங்கிக் கணக்குகளை முடக்குவது மட்டும் போதுமானதல்ல; குற்றவாளிகளைத் தண்டிக்கவும் பாகிஸ்தான் முன்வர வேண்டும் என்று பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் விஜய் நம்பியார் கூறினார்.

நாடாளுமன்றத் தாக்குதலுக்குக் காரணமான தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தவறியதைக் கண்டித்து தனது தூதரை பாகிஸ்தானில் இருந்து இந்தியா திருப்பி அழைத்திருப்பது தெரிந்ததே. (ஒ-4)

### பன்னாட்டு படைகளின் கூட்டம்

ஆப்கானிஸ்தானில் அமைதிப் பணியில் ஈடுபடும் பன்னாட்டுப் படைக்கு இராணுவத்தினரை அனுப்பும் நாடுகளின் கூட்டம் ஒன்று இந்த வாரம் இடம்பெறும் என்று பிரிட்டன் கூறியுள்ளது.

அந்த நாடுகள் பன்னாட்டுப் படைக்கு எத்தகைய துருப்புக்களை, எந்த எண்ணிக்கையில் அனுப்ப வேண்டும் என்று இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும். (ம-6)

# இந்தியா நடத்திய தாக்குதலில் 22 பாக். படையினர் உயிரிழப்பு!

ஸ்ரீநகர்,டிசெ.26

இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்தின் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் தாம் நடத்திய எதிர்த்தாக்குதலில் 22 பாகிஸ்தானிய இராணுவத்தினர் உயிரிழந்ததாக இந்தியப் படைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

புஞ்ச் பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் காலை முதல் தொடர்ந்து பீரங்கித் தாக்குதல் நடத்தியதாகவும் -

இதனையடுத்து அன்று மாலை இந்தியப் படைகள் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் எதிர்த்தாக்குதலில் மேலும் 62 பாகிஸ்தானியப் படையினர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது.

காஷ்மீரின் மற்றப் பகுதிகளிலும் பாகிஸ்தானியத் தாக்குதல்கள் இடம்பெற்றன; அப்போது நடந்த இந்திய எதிர்த் தாக்குதல்களில் 25 பாகிஸ்தானிய நிலைகள் அழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

கடந்த சில நாள்களாக இந்தியா நடத்திவரும் தாக்குதலில் மொத்தம் 45 பாகிஸ்தானிய நிலைகள் அழிக்கப்பட்டதாக இந்தியத் தரப்புக் கூறுகிறது. (ஒ-4)

# லஸ்கர் இ தொய்பாவின் சொத்தை பாகிஸ்தான் அரசு முடக்கியது

இஸ்லாமாபாத்,டிசெ.26

இந்திய நாடாளுமன்றத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னணியில் இருப்பதாகக் கூறப்படும் காஷ்மீர்த் தீவிரவாத அமைப்பான லஸ்கர் இ - தொய்பாவிற்கு பாகிஸ்தானில் உள்ள சொத்துக்களை அந்நாட்டு அரசு முடக்கிவைத்துள்ளது.

பாகிஸ்தானிய வங்கிகளிலுள்ள லஸ்கர் இ - தொய்பாவின் கணக்குகளை முடக்கிவைத்த பாகிஸ்தானிய மத்திய ரிசேர்வ் வங்கி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

எனினும் பாகிஸ்தானின் இந்த நடவடிக்கை தொடர்பாகத் தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று இந்திய வெளியுறவுச் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதனிடையே லஸ்கர் இ-தொய்பா அமைப்பின் தலைவராக இருந்த ஹபீஸ் முஹம்மட் சையித் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

லஸ்கர் இ - தொய்பா அமைப்பை முன்னதாக பாகிஸ்தான் தடை செய்திருப்பது இந்த அமைப்புக்கு பாகிஸ்தான் ஆதரவளித்து வளர்த்து வந்ததாகக் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-4)

### தீவிரவாதத் தலைவர் காஷ்மீரில் கைது!

ஜம்மு,டிசெ.26

ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் முக்கிய தொடர்பு வைத்திருந்த ஹர்கதுல் முஜாகுதீன் அமைப்பின் தலைவர் ராஜா ஒமர் அயூபை காஷ்மீரில் இந்தியப் பொலீஸார் கைது செய்தனர்.

பாகிஸ்தானைச் சேர்ந்த அயூப் இந்தியாவில் அல்கெய்டாவின் கிளைகளை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய 20 முதல் 50 வயதுக்கு உட்பட்ட பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். உடன் விண்ணப்பிக்கவும்.

விள.இல.1423, C/o உதயன்,
யாழ்ப்பாணம். (96289)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.ஐயம்பிள்ளை சின்னத்துரை

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் இலங்கை அஞ்சல், தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் உதவி அஞ்சல் அத்தியட்சகராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவருமாகிய

திருவாளர் ஐயம்பிள்ளை சின்னத்துரை

அவர்கள் இலங்கை நீதி அமைச்சினால் யாழ்.மாவட்ட சமாதான நீதிவானாக நியமனம் பெற்று, 21.12.2001 அன்று யாழ்.மாவட்ட பதில் நீதிபதி உயர்திரு.மு.திருநாவுக்கரசு அவர்கள் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டதையிட்டு அவரை மனமாரப் பாராட்டுவதுடன், அவரது பொதுத் தொண்டு தொடர வாழ்த்துகின்றோம்.

*புத்தூர் கிழக்கு, புத்தூர்.* (96263)
ஐயம்பிள்ளை தர்மலிங்கம *(ஐயாண்ணை)* குடும்பம்,
தர்மலிங்கம் பிரபாகரன் குடும்பம் *(லண்டன்)*.

## கண்ணீர் அஞ்சலி

யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய ஆசிரியை செல்வி க.சிவநேசராணி அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி கந்தையா

அவர்கள் 16.12.2001 இல் காலமாகியதையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,*
யா/கொடிகாமம் திருநாவுக்கரசு
மகா வித்தியாலயம்.
(96257)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

மட்டுவில் தெற்கைச் சேர்ந்தவரும்
மட்டுவில் - நுணாவில் பிரிவின் கிராம அலுவலருமான,
**திரு.வே.துரைசிங்கம் அவர்களின்**
அன்புத் தாயாரான,

**திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா**

அவர்கள் 27.11.2001 ஆம் திகதி அமரத்துவம் அடைந்தமையையிட்டு அன்னாருக்கு எங்கள் அஞ்சலியைச் செலுத்துவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிச் சங்கம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.
(C/19953)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 14 - 02 - 1929 | 19 - 12 - 1999 |

### சண்முகம் இராமலிங்கம்

(பொன்னப்பா)

*திதி: 26-12-2001*

முற்றத்தே வருகைதரும் முகவொளியை
காண்பது எப்போது எம் ஐயா?
உங்கள் நினைவால் ஏங்கித் தவிக்கின்றோம்.

*குமிழ் எல்லை வளவு,*
*செங்குந்தர் வீதி,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.* (96266)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## யாழ். - வவுனியா தரைவழிப்பாதை திறக்க முயற்சி!

கொழும்பு,டிசெ.26

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு தரைவழிப்பாதை ஒன்றைத் திறப்பதற்கான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் தி. மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்தம், வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீதான பொருளாதாரத் தடை நீக்கம் ஆகியவை தாமதமின்றி செயலுருப் பெற்றால் தரைவழிப்பாதையைத் திறப்பதிலும் சிக்கல் ஏற்படாது என்று அவர் நம்பிக்கை வெளியிட்டார். (உ)

## இந்தியாவிலிருந்து நல்லெண்ணமாக கோதுமை மா

புதுடில்லி,டிசெ.26

பிரதமர் ரணிலின் இந்திய விஜயத்தின் நல்லெண்ண அடையாளமாக மூன்று லட்சம் தொன் கோதுமை மாவை - மாதத்துக்கு 25 ஆயிரம் தொன் என்ற அடிப்படையில் - ஒரு வருட காலத்துக்குள் அன்பளிப்பாக வழங்கி முடிக்க இந்தியா முன் வந்துள்ளது.

இலங்கையின் ஒரு மாத கோதுமைத் தேவை 75 ஆயிரம் தொன் ஆகும். (உ)

## இலவச முன்பள்ளி வகுப்புகள்

வலி.கிழக்கு,டிசெ.26

அடுத்த ஆண்டு முதல் முன்பள்ளிச் சிறார்களுக்கான இலவச வகுப்பு ஒன்று கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவில் நடத்தப்படவுள்ளதாக கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின் பொருளாளர் கோ.சிவசுந்தரமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக தாம் நடத்திவந்த முன்பள்ளி பாலர் பாடசாலை வகுப்புகளுக்காக சிறார்களிடமிருந்து சிறு தொகையை அறவிட்டு வந்தது. அடுத்த ஆண்டு தொடக்கம் அந்த நடைமுறை நீக்கப்பட்டு இலவசமாகக் கல்வி போதிக்கப்படவுள்ளது என்று அவர் தெரிவித்தார். (ம-180)

## வல்லை குடாக்கடலில் நீர்மட்டம் அதிகரிப்பு

நெல்லியடி,டிசெ.26

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையை அடுத்து வல்லை குடாக்கடலின் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது.

இதனால் அணைக்கட்டு உடைக்கக்கூடும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை -

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வரணி அம்மா கடையிலிருந்து சுட்டிபுரம் அம்மன் கோயில் வரையான பாதையில் சுமார் 5 அடி உயரமான மழை வெள்ளம் பாய்ந்ததனால் கொடிகாமத்துக்கான போக்குவரத்து நேற்று ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. (ம-109)

## படையினரின் பஸ் குடைசாய்ந்தது

நெல்லியடி,டிசெ.26

படையினரை ஏற்றிக்கொண்டு பலாலிக்குச் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்று நேற்றுக் காலை வீதியை விட்டு விலகி, காணி ஒன்றுக்குள் குடைசாய்ந்தது. அதில் பயணம் செய்த படையினர் காயம் எதுவும் இன்றி உயிர் தப்பினார்கள்.

இச்சம்பவம் அச்சுவேலி வைரவ கோயிலுக்கு அண்மையில் இடம்பெற்றது. (ம-109)

## வீதி பலத்த சேதம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ். - கண்டி வீதியில் அரியாலைக்கும் கொடிகாமத்திற்கும் இடைப்பட்ட பகுதி பலத்த சேதமடைந்து காணப்படுவதினால் அப்பகுதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த கால போர் நடவடிக்கைகளின்போது இவ்வீதியின் பல பகுதிகளிலும் பாரிய குழிகள் ஏற்பட்டிருந்தன. இவை பின்னர் மண்போட்டு நிரவப்பட்டு இப்பாதை போக்குவரத்திற்காகத் திறக்கப்பட்டிருந்தது.

கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழையினால் மண்கள் அடித்துச் செல்லப்பட்டு வீதி மீண்டும் குன்றுங் குழியுமாகக் காணப்படுகின்றது. (ம-15)

## 2 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வி அ.ஜெனிக்கா

வேலணை மேற்கு, 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த
அருள்நாயகம் – சகிதாதேவி

தம்பதியினரின் செல்வப் புதல்வி ஜெனிக்கா தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (26.12.2001) புதன்கிழமை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

ஜெனிக்காவை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, அம்மப்பா, அப்பப்பா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அத்தான்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்போடும் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்:*
*வேலணை மேற்கு, வேலணை.* (96280)
**அருள்நாயகம** (அப்பா)

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 - 06 - 1965 | 12 - 11 - 2001 |

### திருமதி சிவயோகவதி குமாரசாமி

*திதி: 26.12.2001*

எமது சங்கப் பணியாளர் திரு.சி.குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*ப.நோ.கூ.சங்கம்,*
*கொடிகாமம்.* (C/19914)
பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 17 ★ 02 ★ 1966 | 07 ★ 01 ★ 2001 |

### திருமதி புஸ்பராணி ஜெயமோகன்

*L.L.B.(HONS) LONDAN & CLP*

*திதி: 26-12-2001*

ஆண்டு ஒன்று கழிந்தாலும்
ஆழ்ந்த துயரம் ஆறவில்லை
பட்டங்கள் பல பெற்றும்
பாரினிலே வாழ்ந்திடாமல்
கணப் பொழுதில் மறைந்தீர்
பாசங்களைப் பரிதவிக்க விட்டு!

*உங்கள் பிரிவால் வாடும்:*

*கணவர்:* திரு.தி.ஜெயமோகன்
*மகன்:* நக்கீரன்
*மகள்:* வைஷ்ணவி
} *LONDAN*

*மாமனார்:* திரு.தி.திருநாவுக்கரசு
*(ஓய்வுபெற்ற தபாலதிபர்)*
திரு.திருமதி க.கைலைவாசன
*(கொழும்பு),*
திரு.திருமதி பிரேம்குமார். (96204)

*55, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# கைது செய்யப்பட்ட திவ்வியனை விடுவிக்க ரணிலிடம் கோரிக்கை

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் பக்ஸ்

யாழ்ப்பணம்,டிசெ.25

நியாயமற்ற முறையில் பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதி யாண்டு மாணவன் கிருஷ்ணசாமி திவவியனின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு அவரை விடுதலை செய்ய ஆவன செய்யுமாறு பிரதமரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பக்ஸில் அனுப்பிய கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

மேற்படி கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

கடந்த பொ.ஐ.முன்னணி ஆட்சி காலத்தில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதிவருட மாணவனும் முன்னாள் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளருமாகிய கிருஷ்ணசாமி திவ்வியன், இராணுவத்தினரால் காரணமின்றி கைது செய்யப்பட்டு, தற்போது தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த பொ.ஐ. முன்னணி ஆட்சியில் மனித உரிமை மீறல்கள் பல திட்மிட்டு மேற்கொள்ளப்பட்டன அத்தகையதொரு மனித உரிமை மீறல் நிகழ்வே திவ்வியனுக்கும் சம்பவித்துள்ளது. அவர் கைது செய்யப்படுவதற்கு முன்பு அதுவரைகாலமும் இடம்பெற்றுவந்த மனித உரிமை மீறல் சம்பவங்களுக்கு எதிராக யாழ். பல்கலைக்கழகச் சமூகம் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளில் திவ்வியனின் பங்கு மிகவும் முக்கியமானது.

இதனால் ஆத்திரம் அடைந்த இராணுவம் திவ்வியனை பல தடவைகள் கைது செய்ய முயன்றது. திவ்வியனின் பல்கலைக்கழக கல்வி முடிவுற்றதும் இராணுவம் கைது செய்யத் திட்டங்களைத் தீட்டி வந்தது.

கடந்த ஜுலை மாதம் 2ஆம் திகதி திவ்வியன் இணுவில் பகுதியில் உள்ள தனது உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய சமயம் வழி மறித்த இராணுவத்தினர் திவ்வியனை மிக மோசமாகத் தாக்கிய பின்னர் கைது செய்தனர்.கைது நடவடிக்கையினை நியாயப்படுத்துவதற்காக திவ்வியனுக்கு புலிகளுடன் தொடர்பிருந்ததாகவும், திவ்வியனிடமிருந்து தாம் ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் பொய்ப்பிரசாரம் மேற கொள்ளப்பட்டது. திவ்வியன் மிக மோசமான சித்திரவதைக்கும், துன்புறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டு அவருக்கு சம்பந்தமில்லாத குற்றங்கள் ஒப்புவிக்கப்பட்டு நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் கைது செய்யப்பட்ட காலப்பகுதியில் இங்கு பொறுப்பாக இருந்த மேஜர் ஜெனரல் தரத்திலான அதிகாரி ஒருவர் எமது பல்கலைக்கழக பிரதிநிதிகளை சந்தித்து பேசியபோது திவ்வியன் கைது செய்யப்பட்ட சமயம் அவர் எவ்விதமான ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை எனவும், தாம் திவ்வியனிடமிருந்து எவ்வித ஆயுதங்களையும் கைப்பற்றவில்லை எனவும் தெரிவித்திருந்தார். தாம் திவ்வியனை சந்தேகத்தின்பேரிலேயே கைது செய்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்திருந்தார்.

திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட மேற்படி கைது நடவடிக்கையினால் திவ்வியனின் கற்றல் செயற்பாடுகள் முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதுடன், மாணவர் மத்தியில் அச்சத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது. திவ்வியன் இன்னமும் தனது பல்கலைக்கழகக் கல்வியை பூர்த்தி செய்யாத நிலையில் இருப்பதனால் திவ்வியனை விடுவித்து, அவரது கல்வியைத் தொடர, உரிய நடவடிக்கையை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் இந்த நாட்டின் பொறுப்பு மிக்க பிரதம மந்திரி என்ற வகையில் தங்களைக் கோருகிறோம். நியாயமற்ற முறையில் கைது செய்து தடுத்துவைக்கப்பட்டுள்ள திவ்வியனை அவரது எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டு, அவரை விடுதலை செய்ய ஆவன செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம். (ஒ-6-9)

# பொலீஸ்மா அதிபர் பதவி நீக்கப்படுவார்

## அவரது இடத்துக்கு கொட்டகதெனிய?

கொழும்பு,டிசெ.26

பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு அந்தப் பதவியிலிருந்து நீக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. அந்தப் பதவிக்கு தற்போதைய பிரதிப் பொலீஸ்மா அதிபர் எம்.ஜீ.கே.கொட்டகதெனிய நியமிக்கப்படலாம் என்றும் கூறப்படுகின்றது.

ஓய்வுபெறும் வயதைக் கடந்த பின்பும் விசேட அனுமதியின் பேரில் பொலீஸ்மா அதிபராகக் கடமையாற்றி வரும் லக்கி கொடித்துவக்குவை பதவி நீக்குவதற்கு ஐ.தே.கட்சி அரசாங்கம் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த தேர்தலுக்கு முன்னர் ஐக்கிய தேசியக் கட்சியும், தேர்தல் ஆணையாளரும் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் அதனைச் செவி மடுக்காமல் பொலீஸ் அதிகாரிகள் பலரை இடம்மாற்றம் செய்ததனால் பொலீஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கு மீது ஐ.தே.கட்சி கடும் கோபமடைந்திருந்ததாகவும் -

அதனாலேயே தற்போது அவர் பதவி நீக்கம் செய்யப்படவிருப்பதாகவும் -

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

ஓய்வுபெற்ற பின்னரும் சேவை நீடிப்புப் பெற்று கடமையாற்றிக்கொண்டிருக்கும் பொலீஸ் அதிகாரிகள் பலரும் பதவியிலிருந்து நீக்கப்படவிருப்பதாகவும் ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-4)

# சுப்பிரமணியசுவாமி ரணிலுக்கு ஆலோசனை

"புலிகளுடன் பேச்சு நடத்தாதீர்கள்! அப்படிப்பேச்சு நடத்துவது இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையாகும்."

- இப்படி இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி.

"புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்பட்டுள்ளது. அதன் தலைவர்கள் பிரபாகரனும், பொட்டு அம்மானும் ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் பேசுவது இந்தியாவுக்கு எதிரான செயல்.

"தமிழர்களுடன் பேசுவது என்றால் வன்செயல் சம்பவங்களுடன் தொடர்புடைய எஸ்.வி.சந்திரஹாசன் போன்றோருடன் இலங்கை அரசு பேசலாம். - இப்படி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார் சுப்பிரமணியசுவாமி. (உ)

# கூட்டணி அலுவலகம் மீது நெல்லியடியில் கிரனேட்வீச்சு!

தென்மராட்சி,டிசெ.26

நெல்லியடியில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம் மீது கடந்த ஞாயிறன்று இரவு 8.20 மணிக்கு இனந்தெரியாத சிலரால் கிரனேட் கைக்குண்டு வீசியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அருகில் உள்ள தோட்டத்தின் ஊடாக வந்த சிலரே அலுவலகத்தின் பின் பகுதி ஊடாக கிரனேட்டை வீசியதாகவும் -

குண்டு ஜன்னல் கம்பியில் பட்டு நிலத்தில் வீழ்ந்து வெடித்ததாகவும் - அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அலுவலகத்தின் உள்ளே பலர் இருந்தபோதிலும் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என கூட்டணியின் வடமராட்சி அமைப்பாளர் ச.அரவிந்தன் தெரிவித்தார். (ம-117)

# பாதயாத்திரைச் சங்கங்களின் ஒன்றியம் கதிர்காமத்தில் அமைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.26

கதிர்காமம் செல்லும் அடியார்களின் நன்மை கருதி, பாதயாத்திரை சங்கங்களின் ஒன்றிணைந்த ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கதிர்காமத்துக்கு வரும் அடியார்களுக்கு அன்னதானம், தாகசாந்தி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், நோயுற்றிருப்போருக்கு உதவுதல் மற்றும் அநாதை இல்லங்கள், வயோதிபர் இல்லங்கள், பார்வைக் குறைபாடு உடையவர்களுக்கான இல்லங்கள் ஆகியவற்றுக்கு உதவுதல் போன்றன இந்த ஒன்றியத்தின் பிரதான நோக்கங்களாகும்.

கதிர்காம ஆலயத்தின் பழநி முருகன் ஆலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற ஒன்றியத்தின் கூட்டத்தில் ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும், 52பேர் கொண்ட துணைக்குழு ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளன.

கதிர்காமத்தில் துர்க்கை அம்மன் ஆலயம் ஒன்றைக் கட்டுவதற்கும் இந்த ஒன்றியத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (க-7)

# மா பற்றாக்குறையால் பாண் உற்பத்தி தடைப்படும்

## பேக்கரி உரிமையாளர் சங்கம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.25

குடாநாட்டில் பாண் உற்பத்தி முற்றாக ஸ்தம்பிக்கும் நிலை உருவாகியுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

பாண் தயாரிப்பதற்குத் தேவையான மாவைப் பெற முடியாதிருப்பதே இதற்குக் காரணம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் மாவைத் தருவித்து பேக்கரிகளுக்கு விநியோகித்து வருகிறது.

பேக்கரிகளில் கையிருப்பில் உள்ள மா தற்போது முடிவடையும் தறுவாயில் உள்ளதாகவும் -

ஆனால், பருத்தித்துறை துறைமுகத்துக்கு கப்பலில் எடுத்துவரப்பட்ட மாவை இறக்கும் பணி தடைப்பட்டுள்ளதால், மாவை விநியோகிக்க முடியவில்லை என்று பேக்கரி உரிமையாளர் சங்கம் கூறுவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

ஒருநாளைக்கு 4 மூடைகள் மா தேவைப்படுவதாகவும் -

ஆனால் தாம் தற்போது 2 மூடைகள் மாவையே பாண்தயாரிப்புக்கு பயன்படுத்துவதாகவும் -

அதுவும் பெரும்பாலான பேக்கரிகளில் நாளை மறுதினம் மட்டுமே மா கையிருப்பில் உள்ளதால், அதன் பின்னர் பாண் தயாரிப்பு ஸ்தம்பிக்கக்கூடும் என்றும் -

பேக்கரி உரிமையாளர்கள் தெரிவித்தனர். (ஒ-180)

# தேங்காய் திருட்டுச் சம்பவங்கள் மிருசுவிலில் மீண்டும் அதிகரிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.26

மிருசுவில் பகுதியில் இடம் பெயர்ந்த மக்களின் வீடுகளில் இருந்து தேங்காய் திருடப்படும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளன.

குறிப்பிட்ட சில குழுக்களே பட்டப்பகலில் இத்திருட்டுக்களில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. திருட்டில் ஈடுபடும் சிலர் கத்தி போன்ற ஆயுதங்களைக் காட்டி, அவ்வூர் மக்களை அடிக்கடி மிரட்டி அடாவடித்தனம் புரிவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இக்குழுக்களிலுள்ள சிலர் அவ்வூர் மக்களால் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகள் செய்யப்பட்டபோதிலும் திருட்டுக்கள் குறைந்தபாடாக இல்லையெனவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ம-15)



வேலணை, சாட்டி சிந்தாத்திரை மாதா கோயில் விழாவின் போது அண்மையில் விசேட போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் நிலையம் அங்கு இயங்கியது. அச்சமயம் இலங்கை செஞ்சிலுவைச் சங்க வேலணைப் பிரிவுத் தொண்டர்களால் சொட்டுமருந்து வழங்கப்படுவதை படத்தில் காணலாம். (ஐ)

# தென்மராட்சி வலயத்தின் 5 பாடசாலைகள் ஜனவரி மாதம் முதல் சொந்த இடங்களில்!

தென்மராட்சி,டிசெ.26

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த ஐந்து பாடசாலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் அந்தந்த இடங்களில் முழுமையாக இயங்கவுள்ளன.

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அல்லாரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியவையே மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை -

மட்டுவில், நுணாவில் ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர்ந்துள்ள மாணவர்களின் நலன் கருதி மட்டுவில் தெற்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலையை இயக்குவதற்கும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-117)

## புத்தூக்கப் பயிற்சி பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சேவைக் கழகத்தினால் இன்று நடத்தப்படவிருந்த புத்தூக்கப் பயிற்சி மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## ஒளிவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.26

திருமறைக் கலாமன்றம் நடத்தும் ஒளிவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு மன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாடகம், நாட்டியம், கரோல் கீதங்கள் என்பன இடம்பெறவுள்ளன. அத்துடன் நாடகப் பிரதியாக்கப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ம-4)

## கருத்தரங்கு

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க தூய விஞ்ஞானப் பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விஞ்ஞானக் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்குப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

கருத்தரங்கில் மகப்பேற்று மருத்துவ நிபுணர் டாக்டர் ஜி.பவானி 'குடும்பத்தினைத் திட்டமிடுதல்' என்ற தலைப்பில் கருத்துரையாற்றுவார். (ம)

# ஐ.தே.க. அமைச்சரவை பேச்சாளராக ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு,டிசெ.26

ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவைப் பேச்சாளராக அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் நியமிக்கப்படவிருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது அந்தப் பதவியில் இருக்கும் ஐ.தே.கட்சியின் மூத்த உறுப்பினர் கருணாசேன கொடித்துவக்குவிற்கு வேறு சில முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்படவிருப்பதால், அவா அமைச்சரவைப் பேச்சாளர் பதவியிலிருந்து விலகவிருப்பதாகவும் -

அவரின் இடத்துக்கு ஜீ.எல். பீரிஸை நியமிப்பதற்கு ஐ.தே.கட்சியின் தலைமைப் பீடம் முடிவு செய்திருப்பதாகவும் - கூறப்பட்டது. (ம-4)

# பரீட்சை நிலையக் கூரை மழையால் இடிந்து வீழ்ந்தது

தென்மராட்சி,டிசெ.26

வடமராட்சிப் பகுதியில் பெய்த கடும் மழையினால் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் நிலையத்தின் கூரை இடிந்து வீழ்ந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

இமயாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மண்டபமே இடிந்து வீழ்ந்ததாகும். தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த கச்சாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பரீட்சை நிலையம் இப்பாடசாலையிலேயே அமைக்கப்பட்டிருந்தது.

மறுநாள் காலை தென்மராட்சி கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஸ்தலத்திற்கு விரைந்து உடைந்த கூரையைப் பார்வையிட்டபின்னர் பரீட்சை நிலையத்தைக் கரவெட்டி மேற்கு நாவலர் இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றி, பரீட்சை நடைபெற ஒழுங்கு செய்தார்.(ம-117)

### இன்று நடைபெறுவதாக இருந்த

# பாதுகாவலர் சங்கத்தின் போராட்டம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம்,டிசெ.26

கைதாகிப் பின்னர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியும் இணைந்து நேற்றுமுன்தினம் நடத்திய மறியற் போராட்டத்தை, யாழ். அரச அதிபர் தந்த உறுதிமொழியை அடுத்து கைவிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக அரச அதிபர் உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு வெகுவிரைவில் சாதகமான பதிலைப் பெற்றுத் தருவதாகவும் -

அதற்கு ஏதுவாக கைதாகிக் காணாமற்போனோரின் விவரங்கள் அடங்கிய கோவைகளை எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தம்மிடம் தருமாறு அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

அரசாங்க அதிபர் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஏதுவாகவும் - அவரது கோரிக்கைக்கு அமைவாகவும் - தமது மறியற்போராட்டத்தைக் கைவிடுவதாக கைதாகிக் காணாமற போனோர் பாதுகாவலர் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

மறியற்போராட்டம் கைவிடப்பட்டதை அடுத்து இன்று யாழ்.செயலகமும், யாழ்.பிரதேச செயலர் அலுவலகமும் வழமைபோல் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

அரச அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக காணாமற்போனோரின் விவரங்களை அவருக்கு வழங்குவதற்காகப் பாதுகாவலர் சங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

கைதாகிக் காணாமற்போனோரின் உறவினர்கள், காணாமற்போனாரின் விவரங்கள் அடங்கிய கோவைகளை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-6-10)

# நிரந்தரத் தீர்வுக்கு வகை செய்யுமாறு ரணிலிடம் இந்துக் குருமார் கோரிக்கை

## நோபல் பரிசு பெறவும் அவருக்கு ஆசி

இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி நிரந்தர சமாதானம் ஏற்படவும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய - நீதியான - நிரந்தரத் தீர்வு கிட்டவும் வகைசெய்க.

- இவ்வாறு புதிய பிரதமர் ரணில விக்கிரமசிங்கவைக் கோரியிருக்கின்றது 'சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் - இலங்கை' அமைப்பு.

யாழ்ப்பாணம், நீராவியடியில் தலைமைச் செயலகத்தைக் கொண்டுள்ள இந்த அமைப்பின் சார்பில் அதன் செயலாளர் பிரம்மஸ்ரீ கா. சந்திரசேகரசர்மா ஒப்பமிட்டு பிரதமர் ரணிலுக்கும் அவரது அமைச்சர்களுக்கும் அனுப்பி வைத்திருக்கும் ஆசிச் செய்தியிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புதிய பிரதமரும் அவரது அமைசசரவையும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் இவ்வேளையிலே இலங்கையில் இயங்கிவரும் சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் இருந்து அனைத்து இந்துக்களின் சார்பாகவும் - குறிப்பாக இந்து மத குருமாரின் சார்பிலும் - மங்களகரமான நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றது.

நெருக்கடிமிகுந்த இந்தச் சூழலில் ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் தாங்கள் தங்கள் அன்பும், பண்புமிக்க ஆட்சி வல்லமையாலும் மதியூகத்தினாலும் நன்முயற்சியினாலும் இந்த நாடு எதிர்நோக்கியிருக்கின்ற சகல பிரச்சினைகளுக்கும் சுமுகமான தீர்வு கண்டு சுபீட்சமிக்க ஒரு புதுவாழ்வை சகல இன மக்களுக்கும் வழங்கி, உலக மக்கள் மத்தியில் பெரும் புகழைப் பெறுவதோடு சமாதானத்துக்கான நோபல்பரிசையும் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தனை செய்து எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

பலமொழி பேசுவோரும், பல மதங்களைச் சார்ந்தவர்களும், பல இனத்தவர்களும் சேர்ந்து வாழ்கின்ற இந்த இலங்காபுரியிலே - அருள் மிகுந்த பல தெய்வத் தலங்களும், ஆற்றல்மிகுந்த சமயப் பெரியார்களும் வரலாற்றுப் பெருமையும் உடைய இந்நாட்டிலே துரதிர்ஷ்டவசமாக யுத்தம என்னும் பெருந்துன்பம் சகலருக்கும் வேதனை தருவதாக உள்ளது. சாந்தியும் சமாதானமுமே இப்போது அனைத்து மக்களின் முக்கிய தேவையாக உள்ளது.

இப்போது இருதரப்பாலும் வைக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தம், மோதல தவிர்ப்பு ஆகியவற்றை மக்கள் மகிழ்சசியுடன் வரவேற்கின்றார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி நிரந்தர சமாதானம் ஏற்படவும் சிறுபான்மை மக்களாகிய தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய நீதியான நிரந்தரத் தீர்வு ஒன்று கிட்டவும் வகை செய்து செல்வ வளமும் தெய்வ அருளும் செங்கோலாட்சியும் நிலவும் சுபீட்சமிக்க நாடாக இலங்கை திகழவும் உங்கள் ஆட்சியின் பெருமை பொன்னெழுத்துக்களில் பொறிக்கப் படவும் நடவடிக்கைகளை மேற் கொள்ளவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்து ஆசி கூறி அமைகின்றோம் - என்றுள்ளது. (உ)


# மணமகன் தேவை

இந்து, கௌரவ, M.Sc. படித்த, லண்டனில் வசிக்கின்ற, 34வயதுடைய அழகிய மணமகளுக்கு படித்த மணமகன் தேவை. சீதனம் கொடுக்கப்படும். சைவபோசனம் விரும்பத்தக்கது. ஆனால் கட்டாயமல்ல. மணமகன் நல்லொழுக்கமும் கற்றோர் குடும்பத்தைச் சேர்ந்தவராகவும் இருக்க வேண்டும். உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ வசிப்பவராக இருக்கலாம்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
த.சந்திரலேகா
22/5, புகையிரத வீதி, கச்சேரியடி,
(யாழ். செயலகப் பின்புறம்) யாழ்ப்பாணம். (96308)



சாமியே சரணம் ஐயப்பா!

# இந்தியா – சபரி யாத்திரைக்கான மஹா சக்தி பூஜை

*இடம்* : கந்தர்மடம் செட்டியந்தாழ்வு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்
*காலம்* : இன்று (26.12.2001) புதன்கிழமை காலை 10.00 மணி.
*விடயம்*: ஸ்ரீ கன்னிமூல கணபதி ஐயப்பசுவாமி
மஞ்சமாதா தேவி மஹாசக்தி பூஜை,
பஜனைகள்,
18படி பூஜை

ஆகியன இடம்பெறும். ஆகவே சகல ஐயப்ப பக்தர்களையும் கலந்து சிறப்பித்து ஐயப்ப சுவாமியின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

நா.பாலசுப்பிரமணியக் குருக்கள்
தேவஸ்தான
நம்பிக்கைப் பொறுப்பாளர்

(96311)



# கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய சிரேஷ்ட வர்த்தக ஆசிரியை
திருமதி லோகேஸ்வரி நகுலசிறி
அவர்களின் அன்புத் தந்தையார்

## சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

அவர்கள் இறைபதம் அடைந்தமையால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நெடு. சைவப்பிரகாச வித்தியாலயம் — அதிபர், ஆசிரியர்கள்,
*நெடுந்தீவு.* (96310) — மாணவர்கள், ஊழியர்.


## உதைபந்தாட்டம்

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் யாழ்.மாவட்டப் பாடசாலை ஆசிரியர்களுக்கான உதைபந்தாட்டப்போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று பி.ப. 3.30 மணிக்கு இடம பெறும் ஆட்டத்தில் தெல்லிப்பழை கல்விக் கோட்ட அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் கல்விக் கோட்ட அணி விளையாடுகிறது. (ஒ)

## ஆயுள் காப்புறுதி கடனாளிகளுக்கு!

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் தமது ஆயுள் காப்புறுதிப் பத்திரத்தைச் சமர்ப்பித்துக் கடன் பெறுவோர், 6மாத காலத்திற்குள் அந்தப் பணத்தைத் திரும்பச் செலுத்தினால வீண் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காலத்துக்குப் பின்பு செலுத்தப்படும் கடன் தொகைக்கு வட்டி அறவிடப்படும் என்று கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.(ஒ-10)

## ஆலயத்தில் டீசல் திருட்டு முயற்சி முறியடிப்பு

தென்மராட்சி,டிசெ.26

டீசலுக்குத் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில், ஆலயத்திற்கு மின்சாரம் வழங்கும் ஜெனரேற்றருக்கு பயன்படுத்த வைத்திருந்த டீசலைத் திருடுவதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்ட சம்பவம் அண்மையில் தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தில் இடம்பெற்றது.

ஆலயத்தின் ஜெனரேற்றர் அறையின் ஜன்னல் அருகில் வைக்கப்பட்டிருந்த டீசல் பரலுக்குள் குழாயைச் செலுத்தி சிறிய கான்களில் அதனை நிரப்பிக் கொண்டிருநத வேளையில் அவ்வழியே வந்த ஒருவர் சத்தமிடவே திருடன் அங்கிருந்து தப்பியோடி விட்டதாக ஆலய பிரதமகுரு வி.தெய்வேந்திர ஐயர் தெரிவித்தார். (ம-117)


# கண்ணீர் அஞ்சலி

எமது கூட்டுறவு மொத்த விற்பனை நிலைய சக ஊழியர்

## மாப்பாணர் சதானந்தன் (புத்தூர்)

அவர்கள் 21.12.2001 இல் காலமாகியதையிட்டு அவருக்கு கண்ணீர்க் காணிக்கையைச் செலுத்தி, பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தி அடைவதாக!

*சக ஊழியர்கள்,*
(96305) யாழ். கூட்டுறவு மொத்த வி.நிலையம். C.W.E.



# இதய அஞ்சலி

வண்ணை/சாத்தையர்மடம் - ஸ்ரீ கற்பகவிநாயகர்
கோயில் முன்னாள் பிரதம அர்ச்சகர்

## பிரம்மஸ்ரீ செந்தில்நாதசர்மா

அவர்கள் இறைவனடியெய்தியதையிட்டு எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

கோயில் தர்மபரிபாலன சபை,
(96307) சைவசமய அபிவிருத்திக்கழகம்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 27 - 02 - 1930

உதிர்வு 27 - 11 - 2001

## திருமதி செல்லம்மா வேலுப்பிள்ளை

அன்பின் திருவுருவாய் பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் சிகரமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய்
ஊர் புகழும் உத்தமியாய் பார்போற்ற வாழ்ந்து
அன்போடும் பாசத்தோடும் எம்மை வளர்த்து
நல்வழி காட்டிய எங்கள் அன்னையே!
மாதம் ஒன்று கடந்தபோதும் உங்கள் நினைவுகள்
எம்மைவிட்டு என்றென்றும் நீங்காது!

*உங்கள் ஆத்ம சாந்திக்காக*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*"அன்பகம்"*
*வளர்மதி வீதி,*
*மட்டுவில் தெற்கு,சாவகச்சேரி.* (96301)

- பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை பாலசிங்கம்

இருபாலையைச் சேர்ந்த சின்னத்துரை பாலசிங்கம் (ரிங்கர்) நேற்று (25.12.2001) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு காலமானார்.

அன்னார் சின்னத்துரை - நல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், சியாமளன் (ரட்ணாஸ் வைண்டிங்), சுபமாலா, யோகேஸ்வரன், சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.12.2001) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விதானையார் ஒழுங்கை,*
*இருபாலை.* (96302)

*தகவல்:*
பா.சியாமளன்
(மகன்)

## திருமதி தங்கரத்தினம் அப்புத்துரை

கந்தரோடை பிரதான வீதி, ஆலடியைச் சேர்ந்த திருமதி தங்கரத்தினம் அப்புத்துரை நேற்று (25.12.2001) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும், செல்வநாதன் (கூட்டுறவு முன்னாள் ஊழியர் - அச்சுவேலி), நவரத்தினம் (C.E.B. வட்டுக்கோட்டை), இராஜதுரை (கட்டடத் திணைக்களம் - யாழ்ப்பாணம்), புவனராஜா (கனடா), அன்னலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், மதுரநாயகம் (முன்னாள் நில அளவையாளர்பகுதி - கொழும்பு), பூமணி, பேபி, அக்கினஸ், அனுசா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், திலோதீசன், சந்திரா (சுவிஸ்), கணேசலிங்கம், சசிகலா (சுவிஸ்), ரவீந்திரன் (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), தயாளினி, நவக்குமார் (பனை அ.வி.சபை காரியாலயம் - யாழ்ப்பாணம்), மாலினி, சிறிறஞ்சன், மேகலா (நோர்வே), சசிகரன், வள்ளி, சோபனா, பாமதி (வ.வ.பிரதேச சபை), பிரதீபன் (பிரான்ஸ்), நவதீபன், வினோதீபன், ஜனோதீபன், சுகதீபன், சாந்தசீலன் (லண்டன்), சுகந்தசீலன், சுலக்சனா, நிரோஜனா, மதுசன், மதீபன் ஆகியோரின் பேர்த்தியும், டினாத், ரக்னாஸ், டயந்தன்ஸ், கிறிஸ்ரியா, அன்றுகன், றியோஜன், நிவின்சிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2001) புதன்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுன்னாகம் கொத்தியாலடி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி,*
*பிரதான வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (96304)

*தகவல்:*
அ.நவரத்தினம்
(மகன் - *உடுவில் தெற்கு.*)

# குடாநாட்டில் கோதுமை மாவுக்கு தொடர்ந்து பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.மாவட்டத்தில் கோதுமை மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதனால் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதன் காரணமாகப் பாணுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் தேநீர்க் கடைகளில் உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையின் காரணமாகவே மா எடுத்துவரப்படவில்லை எனவும்-

திருகோணமலையில் நிற்கும் 'ஹெந்தல' கப்பலில் ஒரு தொகுதி மா ஏற்றப்பட்டு இங்கு எடுத்துவரத் தயாராக இருப்பதாகவும் -

அநேகமாக இன்று மாலை இக் கப்பல் பருத்தித்துறையை வந்தடையலாம் என எதிர்பார்க்கப்படுவதாகவும் -

யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் கடந்த காலங்கள் போல இல்லாது தொடர்ந்தும் மாவுக்கான தட்டுப்பாடு நீடிக்கும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதிக அளவில் அதனைக் களஞ்சியப்படுத்தி வைக்கமுடியாதுள்ளது.

'பிறிமா' மாவினை, பொதியிடப்பட்ட காலத்தில் இருந்து 3 மாதங்களுக்குப் பின்பு விற்பனை செய்ய முடியாது என்ற சட்ட அங்கீகாரமும் உள்ளது என்று செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-10-180)

# பாண் உற்பத்திப் பொருள்களுக்கு குடாநாட்டில் பெரும் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்,டிசெ.26

யாழ்.மாவட்டத்தில் உள்ள பேக்கரிகளில் பாண் உற்பத்திக்கான பொருள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் அதன் உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த காலங்களில் குறைந்த விலைகளுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட உற்பத்திப் பொருள்களின் விலைகள் தற்பொழுது அதிகரித்துள்ளன. பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்திடமும் இலை கையிருப்பில் இல்லை. இதனால் உற்பத்திப் பொருள்களைப் பெறுவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உற்பத்திக்குத் தேவையான கைக்கோ, பிகைவ் மற்றும் சீனி ஆகியனவற்றை தனியார் கடைகளில் கூடிய விலைக்குப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தையும் அதனால் நஷ்டத்தையும் எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10-180)

*(மற்றொரு செய்தி 6ஆம் பக்கத்தில்)*

## தேவகானம் ஒலிப்பேழை வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.26

கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தினரால் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு "தேவகானம்" என்ற இசை ஒலிப்பேழையும், ஒலி நாடாவும் வெளியிடப்படவுள்ளன.

யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறும் இந்த வெளியீட்டு விழாவில் ஒலிப்பேழையை யாழ்.ஆயர் வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தர நாயகம் வெளியிட்டுவைப்பார்.

ஒலிநாடாவை கலையார்வலன் கு.இராஜப்பு வெளியிட்டு வைப்பார் என்று கத்தோலிக்க கலை இலக்கிய வட்ட பிரதிநிதி தெரிவித்தார்.(ம-6)

## யாழ்.பல்கலைக்கு மற்றுமொரு வெள்ளிப் பதக்கம்

கொழும்பு,டிசெ.26

இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் மினி ஒலிம்பிக்கில் யாழ்.பல்கலைக்கழகத்துக்கு மற்றுமொரு வெள்ளிப் பதக்கம் கிடைத்திருக்கிறது.

ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியிலேயே இந்தப் பதக்கம் கிடைத்தது. (ம-4)

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம்,டிசெ.26

கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி தேவஸ்தானத்தில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மதியம் வரை திருவாசக முற்றோதல் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ம-180)

★ ★ ★

வடமராட்சி,டிசெ.26

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலில் திருவாசக முற்றோதல் நேற்றுமுதல் நடைபெற்று வருகின்றது. (ம-173)

# வட்டுக்கோட்டைப் பகுதியில் திருடர்களின் தொல்லை அதிகரிப்பு

## அடைமழை பெய்வது காரணமாம்

யாழ்ப்பாணம்,டிசெ.26

சங்கரத்தை - வட்டுக்கோட்டைப் பகுதிகளில் இரவு வேளைகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

பெய்துவரும் அடை மழையைப் பயன்படுத்தி வீடுகள், கடைகளை உடைத்து உள்நுழையும் திருடர்கள் பெறுமதியான பல பொருள்களைத் திருடிச் செல்கின்றனர். இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இரவு முழுவதும் அச்சத்துடனேயே இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு சங்கரத்தையில் எஸ்.குருபரன் என்பவரது வீட்டில் ஒரு லட்சம் ரூபா பெறுதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

சம்பவ தினம் இரவு சமையல் அறை யன்னல் வழியாக வீட்டினுள் உட்புகுந்த திருடர்கள், வீட்டிலிருந்த இரு டெக், தொலைக்காட்சிப்பெட்டி போன்ற பொருள்களையும் 20 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தினையும் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நடந்த போது வீட்டில் 5 பேர் நித்திரையில் இருந்ததாகவும், அதிகாலையிலேயே திருடப்பட்ட சம்பவம் தெரியவந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதே தினத்தன்று இரவில் அப்பகுதியில் வசிக்கும் எஸ்.தில்லையம்பலம் என்பவரது வீட்டிலும் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருடர்கள் வீட்டு விறாந்தையில் விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

கடந்தவாரத்தில் வட்டுக்கோட்டை - மூளாய் வீதியிலுள்ள பலசரக்குக் கடை ஒன்று உடைக்கப்பட்டு சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இந்த மாத ஆரம்பத்தில் வட்டுக்கோட்டை மாவடிச் சந்தியிலுள்ள அழகுசாதனப்பொருள் விற்கும் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒரு லட்ச ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.


இது தொடர்பாக பொலீஸாரிடம் முறையிட்டும் எந்த ஒரு பயனும் இல்லை எனவும் திருட்டுக்களின் நடவடிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதாகவும் அப்பகுதிப் பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ம-180)



கரணவாய் தெற்கு செல்வபுரம் இளங்கோ சனசமூக நிலையத்தின் 29ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் ஜெயராஜா நிலையக் கொடியை ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் நிலையத் தலைவர் மகாலிங்கம், பொருளாளர் க.நடராசா ஆகியோரையும் படத்தில் காணலாம்.

*(படம் : அச்சுவேலிச் செய்தியாளர்)*



பருத்தித்துறை பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட சிறுவர், முதியோர் தினவிழாவில் முதியவரான கற்கோவளத்தைச் சேர்ந்த எஸ்.தணிகாசலம், கிராம அலுவலர் கே.சிவசண்முகத்தால் மாலை சூடிக் கௌரவிக்கப்படுவதையும், பிரதேச செயலாளர் ஆ.சிவசுவாமி, சமூகசேவை உத்தியோகத்தர் மு.தர்மலிங்கம் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் காணலம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

# மழையை அடுத்து வீதிகளில் குழிகள்

## பொதுமக்களுக்கு பெரும் சிரமம்

கோப்பாய்,டிசெ.26

யாழ்ப்பாண குடாநாட்டுப் பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் பெரும்பாலான பிரதான வீதிகள் மற்றும் தற்போது செப்பனிடப்பட்ட வீதிகள் என்பவற்றில் ஆங்காங்கே பெரும் குழிகள் ஏற்பட்டுள்ளன.

இத்தகைய குழிகளில் தேங்கி உள்ள மழைநீர் வாகனங்கள் செல்லும் போது பாதசாரிகளுக்கு வீசி அடிக்கப்படுவதால் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

அத்துடன் சிதைவடைந்த கற்களும் குழியைச் சுற்றி வீதியில் பரவிக் காணப்படுவதால் வாகன விபத்து ஏற்படும் சந்தர்ப்பங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ம-72)

# கைதடி – கோப்பாய் வீதி மழையால் தடைப்படும் ஆபத்து

தென்மராட்சி,டிசெ.26

தொடர்ந்து பெய்யும் கடும் மழையினால் கைதடி - கோப்பாய் வீதியில் போக்குவரத்துத் தடை ஏற்படலாமென நம்பப்படுகிறது.

இவ்வீதியில் உள்ள சேதம் அடைந்த பாலத்திற்கு அருகில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாதையில் பாரிய பள்ளம் ஒன்று ஏற்பட்டுள்ளதால் சைக்கிள் தவிர வேறெந்தவொரு வாகனமும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இவ் வீதி வழியே நேற்றுமுன்தினம் தொடக்கம் போக்குவரத்துச் செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

இப்பாலம் உள்ள கடற்பகுதியில வெள்ளம் அதிகரித்துவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# திருமலையில் படையினரின் கெடுபிடிகள் மேலும் அதிகரிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரின் பாதுகாப்புக் கெடுபிடிகள் தீவிரமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வீதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகளில் உள்ள படையினர் வீதிகளில் செல்வோர் மீது கடுமையான சோதனைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அத்துடன் பல வீதிகளில் புதிய சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டுவருகின்றன. வீதிகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் தமது வாகனங்களை விட்டு இறங்கி சிறிதுதூரம் நடக்கவேண்டும் என்றும் படையினரால் பணிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி திடீர் திடீரென கிராமங்களுக்குள் பெருமெடுப்பில் வந்திறங்கும் படையினர், வீடு வீடாகச் சென்று சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் சந்தேகத்துக்கிடமானவர்களைக் கைதுசெய்து, விசாரணைக்குட்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

# துன்பத்தைக் களைந்து இன்பத்தை நல்கும் சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் இன்று

இன்று சுவர்க்கவாயில் ஏகாதசி நன்னாள்.

ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதங்களுள் சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் முதன்மை வாய்ந்தது. இந்த விரதம் பற்றி பத்மபுராணத்தில் மிகவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

அமாவாசைக்குப்பின் வருகின்ற பதினொராவது நாள், பௌர்ணமிக்குப்பின் வரும் பதினொராவது நாள் என மாதத்தில் இரண்டு ஏகாதசிகள் வரும். ஆனால் மார்கழி மாதம் வரும் வளர்பிறை ஏகாதசியே மிகவும் மகிமை பொருந்தியது. இது வைகுண்ட ஏகாதசி எனவும் அழைக்கப்பெறும். கண்ணன் கீதையில் மாதங்களில் நல்லது மார்கழி என்று குறிப்பிடுகிறார். ஆகவே, மார்கழி மாதம் குளிர்ச்சி மிகுந்த ஒரு நல்ல மாதம். அதுவே சிறந்த மாதமாகும்.

இந்த மாதம் முழுவதும் அதிகாலையிலேயே வீட்டு முற்றத்தில் மெழிகி, கோலமிட்டு, சூரிய வழிபாடாற்றி அடுத்த மாதம் முதல்நாள் தைப்பொங்கல் பொங்கி மகிழ்வது தமிழர் மரபு.

மகாவிஷ்ணு மூர்த்தியை நினைந்து இன்று முழுநாளும் விரதமிருந்து, நித்திரை விழித்து அவருடைய புகழ்கூறும் பாகவத புராணங்களையும், பாட்டுக்களையும், பதிகங்களையும் படித்துப் பதினொரு முறை கோயிலை வலம்வந்து வணங்கி வேண்டிக்கொள்வது தொன்றுதொட்டு நிலவிவருகின்ற ஒரு வழமை.

வைஷ்ணவ சமயத்தினர் திருமாலை முழுமுதற் கடவுளாக வழிபட்டு, இந்தச் சுவர்க்கவாயில் ஏகாதசியில விரதமிருந்து, உபவாசமிருப்பர். திருமால் தம்மை வழிபடும் அடியார்களின் துன்பத்தையும், துயரத்தையும் களைந்து, தமது பரிபூரண மான திருவருட் கடாட்சத்தினை அருளிச்செய்யும் விசேட தினம் இந்த வைகுண்ட ஏகாதசித தினமாகும். இந்த விரதத்தை முறையாக அனுஷ்டித்தால் ஆயுள் விருத்தியும், தேக ஆரோக்கியமும் சகல ஐஸ்வரியங்களும் கிடைக்கப்பெற்று, மகிழ்ச்சியுடன் வாழலாம் என்பது வைஷ்ணவர்கள் நம்பிக்கை.

**சைவப்புலவர்**
**இராசையா ஸ்ரீதரன்**

இந்த விரதத்துக்குரிய புஷ்பம், துளசி முதலியவற்றைத் தட்டத்தில் வைத்து, விஷ்ணுவைப் பூசித்து, வழிபட்டுப் பெருமாளுக்குரிய மந்திரங்களை உச்சாடனம் செய்து, இரவு முழுவதும கண் விழித்து, உபாசனை பண்ணி மறுநாள் பாரணையின் போது துளசி இலையையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று புராணத்தில் கூறப்படுகிறது. சுவர்க்கவாயில் திறக்கும்போது நாம் கண்ணனின் திவ்ய பிரபந்தங்களை ஓதி உய்தி பெறலாம். நாமசங்கீர்த்தனம் மிகுந்த நன்மையை அளிக்கவல்லது.

*பச்சை மாமலை போல் மேனி*
*பவளவாய் கமலச் செங்கன்*
*அச்சுதா அமர ரேறே*
*ஆயர்தம் கொழுந்தே என்னும்*
*இச்சுவை தவிர யான் போய்*
*இந்திர லோகம் ஆளும்*
*அச்சுவை பெறினும் வேண்டேன்*
*அரங்கமா நகருளானே*

என்றபடி ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின பேரருளுக்குப் பாத்திரமாகிவிட்டால் இந்திரலோகப் பதவி கிடைத்தாலும் வேண்டாம் என்பது புலப்படுகின்றது.

அதர்மம் மேலோங்கி, தர்மம் குன்றும்போது ஸ்ரீ மகாவிஷ்ணுமூர்த்தி பூமியில் வந்து தோன்றி, அசுர குணங்களை வேரோடு களைந்து, அதர்மத்தை நிலைநாட்டுவார் என்று பகவத கீதை கூறுகின்றது. துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன மூர்த்தியாக விளங்குகின்ற திருமாள் இந்த சுவர்க்கவாயில் ஏகாதசி விரதத்தை அனுஷ்டிக்கும் தமது பக்தர்களுக்கு வரும் துன்பங்களைக் களைந்து, இன்பத்தை நல்கி திருவருள் புரிவார் என்பது திண்ணம்.

வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமான் ஆலயம், வல்லிபர ஆழ்வார் திருக்கோயில், பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோயில் முதலிய விஷ்ணு ஆலயங்களில் இன்று சுவர்க்கவாயில் ஏகாதசி விழா விஷேடமாக நடைபெறுகின்றது.

இந்த விரதத்தை அனுஷ்டித்து, பிறவிப் பயனை அடைந்து, மோட்ச கதி பெற்றுப் பேரின்பப் பெருவாழ்வை எய்தும்பொருட்டு ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் பேரருளுக்குப் பாத்திரமாக முனைவோமாக.

ஸ்ரீ மகாவிஷ்ணு மூர்த்தியே சரணம்! ★

### புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள

# மட்டக்களப்புப் பிரதேசத்துக்கான பொருள் விநியோகத்தில் கட்டுப்பாடு?

மட்டக்களப்பு,டிசெ.26

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் லொறிகளின் எண்ணிக்கை படையினரால் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாகச் செய்தி ஏஜென்ஸி ஒன்று தகவல் வெளியிட்டது.

மட்டக்களப்பு பட்டிருப்புப் பாலம் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு உணவு மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களுடன் செல்லும் லொறிகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனால் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கு லொறிகளில் எடுத்துச்செல்லப்படும் பொருள்களில் பெரும்பகுதியை விடுதலைப் புலிகள் தமது தேவைகளுக்கு பயன்படுத்துவதனாலேயே இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொதுமக்கள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கடிதங்கள் மூலம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

- இவ்வாறு அந்தச் செய்தி ஏஜென்ஸி மேலும் தெரிவித்தது. (உ-4)

## நின்ற நிலையில் மாணவர் பரீட்சை எழுதும் அவலம்

### கிளிநொச்சியில் பரிதாப நிலை

வவுனியா,டிசெ.26

நின்ற நிலையில் மாணவர்கள் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சை எழுதுகிறார்கள். இந்தப் பரிதாபம் கிளிநொச்சியில் நடக்கிறது. இந்த நிலைமைக்குக் காரணம் மழை! விடாத மழை!!

பரீட்சை நிலையங்களுக்கு மாணவர்கள் உரிய நேரத்தில் போய்ச் சேர முடியாத நிலைமை. அந்தளவுக்கு வீதிகளில் வெள்ளம்.

பரீட்சை நிலையங்களுக்குள்ளும் வெள்ளம்.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் ஐயாயிரம் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். மொத்தம் 38 பரீட்சை நிலையங்கள். அவற்றில் மூன்றே மூன்றுதான் நிரந்தரக் கட்டடங்களில் இருக்கின்றன. மற்ற முப்பத்தைந்தும் வெறும் கிடுகுக் கொட்டில்களில்.

இந்தக் கொட்டில்களில் தளபாட வசதி இல்லை. அதனால் மாணவர்கள் நிலத்தில் இருந்துதான் பரீட்சை எழுதவேண்டும்.

கடும் மழை காரணமாக இந்தக் கொட்டில்களும் வெள்ளக்காடாகி விட்டன. மாணவர்கள் என்ன செய்வார்கள்?

வேறு வழியின்றி எழுந்து நின்ற நிலையில் பரீட்சை எழுதினார்கள்!

கொடிய யுத்தம் கட்டடங்களைத் தரைமட்டமாக்கியது. கடும் மழை தற்காலிகக் கொட்டில்களையும் வெள்ளக் காடாக்கி மாணவர்களின் பரீட்சையோடு விளையாடிவிட்டது.

## சமய சந்நிதிகளில்

கோப்பாய், டிசெ.26

வடகோவை ஸ்ரீ சக்கராழ்வார் தேவஸ்தான வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா இன்று புதன்கிழமை இரவு பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இரவு விசேட பூசைகள், கலை நிகழ்வுகள் நிகழ்வதுடன் நாளை காலை அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (ம-72)

* * *

வடமராட்சி,டிசெ.26

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் திருவெம்பாவையைத் தொடர்ந்து திருவாதவூரவடிகள் புராணப்படிப்பு கடந்த 20 ஆம் திகதி முதல் நடைபெற்றுவருகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் இப்படிப்பு, எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பூர்த்தியடையும். (ம-173)

## புலமைப்பரிசிலுக்கு மாணவர் தெரிவு பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.26

அரியாலைப் பகுதியைச் சேர்ந்த தரம் 5 இல் பயிலும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்துக்கு மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை இன்று புதன்கிழமை காலை 10 மணி முதல கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அரியாலை அபிவிருத்திச் சங்கம் இத்திட்டத்தை நடைமுறைப் படுத்துகின்றது (க-3)

## நள்ளிரவுவேளை வீட்டில் புகுந்து சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம்,டிசெ.26

கட்டப்பிராய்ப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு, வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள், சுமார் 50ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி ஒன்றைத் திருடிச் சென்றுள்ளனர் என்று கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருடர்கள் வீட்டின் பின்புறக் கதவை உடைத்து உட்சென்று மேசையில் கிடந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றனர்.

வீட்டார் திடீரென்று கண்விழித்ததையடுத்து திருடர்கள் சங்கிலியை மட்டும் எடுத்துக்கொண்டு ஓடித் தப்பிவிட்டனர் என்று கூறப்பட்டது.

இப்பகுதியில் அண்மைக்காலத்தில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-180)

## வளர்ப்பு நாய் சிறுவனை கடித்துக்குதறியது!

யாழ்ப்பாணம்,டிசெ.26

வளர்ப்பு நாயைச் சங்கிலியால் கட்டமுயன்ற 6 வயதுச் சிறுவனை அது நிலத்தில் வீழ்த்தி முகத்தில் மூன்று இடங்களில் கடித்துக்குதறியது.

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த தேவராஜன் பிரகாஷ் என்ற சிறுவனே படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 6 வருடங்களாக வீட்டில வளர்த்துவரும் நாயே நேற்றுப் பிற்பகல் சிறுவனைக் கடித்துக் குதறியது குறிப்பிடத்தக்கது. (க-6)

## இம்முறை அமைதியான நத்தார் நள்ளிரவு பிரார்த்தனையும் நடந்தது

யாழ்ப்பாணம்,டிசெ.26

நத்தார் பண்டிகை குடாநாட்டில் உள்ள கிறிஸ்தவ மக்களால் நேற்று அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

விடுதலைப் புலிகள் மற்றும் அரசின் யுத்தநிறுத்தம் நேற்றுமுன்தினம் நள்ளிரவுடன் நடைமுறைக்கு வந்ததை அடுத்து, மக்கள் மிகவும் சந்தோசத்துடன் தமது பண்டிகையைக் கொண்டாடினார்கள்.

ஊரடங்குச் சட்டமும் நீக்கப்பட்டிருப்பதால் யாழ்நகரப் பகுதியிலும் குடாநாட்டின ஏனைய இடங்களிலும் தேவாலயங்களில் இடம்பெற்ற நள்ளிரவுப் பிரார்த்தனையில் மக்கள் கலந்துகொண்டனர். (க-10)

## நத்தார் தினத்தில் விபத்து: ஒருவர் பலி; 36பேர் காயம்

அப்புத்தளை,டிசெ.26

நள்ளிரவு ஆராதனையை முடித்துவிட்டு வீடு திரும்பியவர்களை ஏற்றி வந்த லொறி, 150 அடி பள்ளத்தில் பாய்ந்தது. ஒருவர் உயிரிழந்தார்; 36 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நுவரெலியா தலவாக்கலைப் பிரதேசத்தில் சென்.கிளையர் வித்தியாலயத்துக்கு முன்பாக நேற்று அதிகாலை இடம்பெற்றது. பிலோமினா (வயது 20) என்பரே உயிரிழந்தவராவார்.

லொறியில் 60 பேர் பயணம் செய்தனர். காயமடைந்தவர்கள் நாவலப்பிட்டி, தலவாக்கலை, கொட்டகலை ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். சிறுமி ஒருத்தியின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.


## மாயவனுக்கு வாழ்த்துக்கள்!



நேற்று 25-12-2001 தனது ஐம்பதாவது அகவையை நிறைவுசெய்த

முத்துக்கிருஷ்ணர் அற்புததேவன்

*(மாயவன்)*

*அவர்களை எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.*

*கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.* (C/19961) - பாரதி பதிப்பகம்.


## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

நிகழ்வுறும் விஷு வருடம் மார்கழித் திங்கள் 3ஆம் நாள் (18.12.2001) செவ்வாய்க்கிழமை மருதடி விநாயகர் திருவடி அடைந்த எமது அன்புத் தாயாரும் குடும்பத் தலைவியும் ஆகிய

### அமரர் கமலாம்பிகை சுப்பிரமணிஐயர்

*(வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆதீனகர்த்தா)*

அவர்களின் ஆத்மசாந்திக் கிரியைகள் 27.12.2001 தொடக்கம் நடைபெறும்.

தசாகம் :27.12.2001 வியாழன் காலை 10.00 மணி.

கிருஹயக்ஞம் :30.12.2001 ஞாயிறு பகல் 12.00 மணி.

மேற்படி கிரியைகளில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*மக்கள்:* சு.சண்முகநாதசர்மா, சு.முருகானந்தசர்மா, சு.குகதாசசர்மா, சு.மகேஸ்வரசர்மா, இ.கலாநிதி, சு.இராசேஸ்வரசர்மா, மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*சிவன்கோயில் முன்பாக, சித்தன்கேணி.*

(96317)

## வடக்கு மீனவர் கட்டுப்பாடுகளின்றி மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும்

### விநாயகமூர்த்தி எம்.பி. கோரிக்கை

கொழும்பு,டிசெ.26

பட்டினி நிலையில் உள்ள வடக்கு மீனவர்கள் எந்தவித கட்டுப்பாடுமின்றி மீன்பிடிக்க அனுமதிக்கப்படவேண்டுமென்று யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி கோரிக்கை விடுத்துள்ளார்.

புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவுக்கு நேற்று அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்தார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கில் மீன்பிடிக்க விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளால் மீனவர்கள் பட்டினி நிலையில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் எந்த வித கட்டுப்பாடுகளுமின்றி மீன்பிடிக்க அனுமதிக்க வேண்டும். இதற்கான உத்தரவை படை அதிகாரிகளுக்கு விடுக்கவேண்டும்.

வடக்கில் முக்கிய சில பாடசாலைகளைப் படையினர் தம் வசம் வைத்துள்ளனர். அந்தப் பாடசாலைகளில் இருந்து படையினரை வாபஸ் பெற்றுப் பாடசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்க ஏற்பாடு செய்யவேண்டும் - என்றும் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## கிறிஸ்மஸ் அலங்காரத்தில் ஈடுபட்ட இளைஞர் மின்சாரம் தாக்கி பலி!

கிறிஸ்மஸ் தினத்திற்கு வீட்டில் அமைக்கப்பட்ட பாலன் குடிலுக்கு அலங்கார மின்குமிழ்களைப் பொருத்திக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மின்சாரம் தாக்கி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்த துயரச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் குருநகர் கொண்டி வீதியைச் சேர்ந்த சூசைப்பிள்ளை றோபேர்ட் (வயது 16) என்ற இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

யாழ்போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்ட இவரது சடலம் மரண விசாரணைகளின் பின்னர் நேற்று நண்பகல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த ஒரு வாரகாலத்தில் மட்டும் குடாநாட்டில் மூவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-6-15-139)


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி இராசேந்திரம்

குருசோ றோட்டைப் பிறப்பிடமாகவும் செபஸ்ரியன் றோட்டை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசேந்திரம் நேற்று (25.12.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னு தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராசா, தாசன், வைலற், புனிதம் ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேந்திரன், இன்பம், அமலநேசன் ஆகியோரின் மாமனாரும், செல்வி, செல்வா, டொறிஸ், அனிஸ்ரன், சத்தியா, சாய்கிருஷ்ணன், டினேஸ், சாம்றோய் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.12.2001) புதன்கிழமை இல.7, சென்.செபஸ்ரியன் வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து பி.ப. 3.30 மணிக்கு யாழ்.மரியன்னை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பொ.அமலநேசன் (மருமகன்)

*இல.7, சென்.செபஸ்ரியன் வீதி, யாழ்ப்பாணம்.* (96316)

### கந்தர் சின்னராசா

கைதடி மேற்கைச் சேர்ந்த கந்தர் சின்னராசா (ராசப்பா) நேற்று (25.12.2001) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும் சறோசாதேவி, ரவி (ஜேர்மனி), ஜெயந்திராசா (சுவிஸ்), கண்ணன் (டென்மார்க்), சிறி (லண்டன்) ஆகியோரின் தந்தையும் தங்கராசா சாந்தி, வதனி, சுசிலா ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2001) புதன் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரியான் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் க.சிவராசா (பேராமகன்)

*கைதடி மேற்கு, கைதடி* (96314)

### நிற்சிங்கம் சிவராசா

*(ஜேர்மனி)*

பட்டணத்தான்வளவு, இமையாணன் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நிற்சிங்கம் சிவராசா (22.12.2001) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நிற்சிங்கம் - தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவக்கொழுந்து மற்றும் பவளம், சோதி (UK), விஜயகலா ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க.விஜயரத்தினம் (விஜயன் - பளை) (மைத்துனன்)

*பட்டணத்தான் வளவு, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.* (96313)

### பொன்னையா சுப்பிரமணியம்

கோயிற்கடவை, துன்னாலை மத்தியைச் சேர்ந்த பொன்னையா சுப்பிரமணியம் நேற்றுக் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் திருமதி சாந்தகுமாரி இராகவன் (ஆசிரியை, திருஇருதயக் கல்லூரி, கரவெட்டி), சாந்தகுமார் (பிரான்ஸ்), சூரியகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கராசா, சுந்தரலிங்கம், சொக்கலிங்கம், சிவலிங்கம் (கனடா), காலஞ்சென்ற சிவராசசிங்கம், ஜெயராசாசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராகவன் (மணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி), காஞ்சனா (பிரான்ஸ்), மாலினி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக வேருண்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: இ.இராகவன் (மருமகன்)

*கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி.* (C/19964)

விடுதலைப் புலிகளை தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்று

# அமைதிப் பேச்சை விரைந்து நடத்த இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள்!

## திருகோணமலைத் தமிழ்ச் சமூகம் ஐ.நா. செயலாளரிடம் கோரிக்கை

திருகோணமலை,டிசெம்பர்26

**சமாதான நடவடிக்கைகளை விரைந்து முன்னெடுக்கும்படியும் -**

**இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை ஏற்று அங்கீகரித்து, அவர்களுடன் சமாதானப் பேச்சு நடத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை வெளியிடும்படியும் -**

**இலங்கை அரசின் மீது அழுத்தம் கொடுங்கள்.**

**இவ்வாறு திருகோணமலை மாவட்ட தமிழ்ச் சமூகம், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனானைக் கோரியுள்ளது.**

இது தொடர்பான மகஜர் ஒன்று திருகோணமலை தமிழ்ச் சமூகத்தின சார்பில் ஐ.நா. செயலாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் அமெரிக்கா, பிரிட்டன், இந்தியா, நோர்வே, கனடா, அவுஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களின் ஒன்றியம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், கிழக்குப் புனர்வாழ்வு நிறுவனம், திருகோணமலை மாவட்ட பட்டதாரிகள் சங்கம், வடகிழக்கு தமிழ் ஆசிரியர் சங்கம், திருகோணமலை மாவட்ட பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியவை உட்பட பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் சிரேஷ்ட சட்டத்தரணிகளும் மற்றும் சமூகத்தலைவர்களும் இந்த மகஜரில் ஒப்பமிட்டுள்ளனர்.

"தொடர்ந்து இலங்கையில் ஆட்சி செய்துவந்த அரசுகள் சமாதானப் பேச்சு நடத்துவதற்கு திரும்பத் திரும்ப புலிகள் விடுத்துவந்த அழைப்பை பல்வேறு நொண்டிச்சாட்டுக்களைக் கூறி நிராகரித்து வந்ததுடன், அரசின் சகல மூலவளங்களையும் ஒன்றுதிரட்டி யுத்தத்திலும் முனைப்புடன் ஈடுபட்டு வந்தன.

"இலங்கையில் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்ற கோரிக்கையை முன் வைத்து கடந்த தேர்தலில் போட்டியிட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பை வடக்கு, கிழக்கில் உள்ள தமிழர்கள் முழு அளவில் ஆதரித்துள்ளனர்.

"எனவே புலிகளை தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக ஏற்று சமாதானப் பேச்சை விரைந்து ஆரம்பிக்கும்படி இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுங்கள்.

"ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரக அறிக்கைப்படி தொடரும் யுத்தத்தினால் 75 ஆயிரம் தமிழர்கள் உயிரிழந்துள்ளனர். வடக்கு, கிழக்கில் அவர்களது சொத்து மற்றும் உடைமைகளில் அறுபது வீதம் அழிக்கப்பட்டுவிட்டது.

"இலங்கையின் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - அவர்களை சிறுபான்மையினராககவே அரசு தொடர்ந்து யுத்தத்தை நடத்தி வருகின்றது."

- இப்படி அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## சிறு கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி வங்கி

### உருவாக்கப்படுகிறது என்கிறார் அமைச்சர்

கொழும்பு,டிசெ.26

கிராமிய மட்டத்தில் சிறு கைத்தொழில்களை ஊக்குவிப்பதற்கு கடன் உதவிகளை வழங்க கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி வங்கி உருவாக்கப்படவிருக்கின்றது.

கிராமிய பொருளாதார அமைச்சர் பந்துல குணவர்த்தனா இதனைத தெரிவித்தார்.

வர்த்தக வங்கிகளில் வட்டி வீதங்கள் அதிகம். அதனால் கிராமிய மட்டத்தில் சிறு கைத்தொழில் செய்பவர்கள் அந்த வங்கிகளில் கடன்களைப் பெறமுடியாத நிலையில் உள்ளனர். இதன் காரணமாக புதிய வங்கி ஒன்று உருவாக்கப்படுகின்றது. குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் பணியை இந்த வங்கி மேற்கொள்ளும் - என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (க-3)

## போர் மேகங்களினால் உலகம் பெரிதும் அச்சுறுத்தப்பட்டுள்ளது!

### கிறிஸ்மஸ் செய்தியில் பாப்பரசர் பெரும் கவலை

வத்திக்கான்,டிசெ.26

யுத்தம், பதற்றம் ஆகியவற்றின் காரணமாக மனித உள்ளங்கள் கவலையடைந்திருந்தாலும் இயேசு கிறிஸ்துவின் சமாதானச் செய்தி இன்னமும் பெறுமதிவாய்ந்தது என்று பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையோடு தொடங்கிய புத்தாயிரம் ஆண்டு வன்முறை மற்றும் போர் மேகங்களினால் அச்சுறுத்தப்பட்டுள்ளது என்றும் பாப்பரசர் கவலை தெரிவித்துள்ளார்.

தன்னுடைய பாரம்பரிய கிறிஸ்மஸ் செய்தியின் பெரும்பகுதியை உலகம் முழுவதிலுமுள்ள குழந்தைகளுக்காக ஒதுக்கிய பாப்பரசர், குழந்தைகள்தான் மனித குலத்தின் நம்பிக்கை எனக்குறிப்பிட்டார்.

வத்திக்கான் சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தின் மாடத்தில் இருந்து பல்லாயிரக்கணக்கான புனித யாத்திரிகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு நேரடியாகவும், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக உலகெங்கும் உள்ள மக்களுக்கும் பாப்பரசர் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:-

இயேசுவின் முகத்தில் உலகின் அனைத்துக் குழந்தைகளின் முகங்களும் தெரிகின்றன. அது பலஸ்தீனக் குழந்தையோ, இஸ்ரேலியக் குழந்தையோ, அமெரிக்கக் குழந்தையோ அல்லது ஆப்கன் குழந்தையோ - அனைத்துக் குழந்தைகளின் முகங்களையும் குழந்தை இயேசுவின் முகம் பிரதிபலிக்கின்றது.

தாங்கள் தவறு ஏதும் செய்திராத நிலையில் உலகின் குழந்தைகள் ஏராளமானோர் போரினால் பாதிக்கப்பட்டு துன்பத்தை அனுபவித்து வருகின்றார்கள். மனித குலத்தின் நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்காக நாம் நம் குழந்தைகளைப் பாதுகாப்போம் -- என்றும் அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டார்.

செப்ரெம்பர் 11 ஆம் திகதி இடம்பெற்ற நியூயோர்க் தாக்குதல் பற்றியோ, ஆப்கான் மீதான குண்டுவீச்சுப் பற்றியோ பாப்பரசர் நேரடியாகக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றாலும் பூமியில் எழுந்துள்ள பயங்கரப் பிரச்சினைகள் என்றுகூறி அவற்றை அவர் குறிப்பிட்டுப் பேசினார்.

பல்வேறு மதங்கள் மற்றும் கலாசாரங்களின் ஒத்துழைப்புக்காக



உழைக்கும் அனைவருக்காகவும் அவர் இறைவனிடம் பிரார்த்தித்தார்,

உலகின் வளங்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்றும் -

அனைவருக்கும் இலாபகரமான தொழில் மற்றும் வேலைவாய்ப்பு வேண்டும் என்றும் -

உலகில் பல பகுதிகளில் இருந்து அவநம்பிக்கை ஓலங்கள் எழுவதைத் தான் கேட்கமுடிகிறது என்றும் - அவர் கூறினார்.

தனது ஆசிகளையும், ஆசீர்வாதங்களையும் வழங்கிய பின்னர் 60 வெவ்வேறு மொழிகளில் பாப்பரசர் தனது கிறிஸ்மஸ் வாழ்த்தைத் தெரிவித்தார்.

பெத்தலகேம் நகரில் நடைபெறும் மதக் கொண்டாட்டங்களில் யாஸீர் அரபாத் கலந்துகொள்ள இஸ்ரேல் அனுமதிக்க வேண்டும் என்று பாப்பரசர் கூறியதற்கு இஸ்ரேல் செவிமடுக்கவில்லை. இஸ்ரேலுடைய நடவடிக்கை தன்னிச்சையான முடிவு என்று வத்திக்கான் கூறியிருக்கின்றது. (க-9)

## பிரதமரின் இந்திய விஜயம் குறித்து தமிழ்த் தலைவர்களின் கருத்துகள்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியா சென்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடனும் மற்றும் தலைவர்களுடனும் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஆலோசனை நடத்திவிட்டுத் திரும்பியிருக்கின்றார் அல்லவா? இது பற்றித் தமிழ்த் தலைவர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

**ஜோசப் பரராஜசிங்கம்**
**(கூட்டணி)**

இலங்கை விவகாரத்தில் இந்தியா முன்னர் கையைவிட்டுச் சுட்டுக்கொண்டது. இனியும் அதன் முயற்சி வெற்றியளிக்காது. ஆயினும் இலங்கை விவகாரத்தில் நோர்வேயின் அனுசரணைக்கு உதவியாக இருக்க இந்தியா உறுதியளித்திருப்பது இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய சிறு எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கிறது.

**செல்வம் அடைக்கலநாதன்**
**(ரெலோ)**

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையில் நோர்வேயின் அனுசரணைப் பணியை ஏற்று, ஆலோசனைகளை மட்டும் வழங்கும் வகையில் இந்தியாவின் பங்களிப்பு அமைந்தால் அதை நாம் வரவேற்போம். நோர்வேயின் கைகளை இந்தியா பலப்படுத்த வேண்டும். தீர்வு தொடர்பான நடைமுறைகளுக்கு இந்தியா உந்துசக்தியாக இருக்க வேண்டும்.

**அ. விநாயகமூர்த்தி**
**(தமிழ்க் காங்கிரஸ்)**

சமாதான முயற்சிகளில் இந்தியாவுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தேவையில்லை. தெற்காசிய வல்லரசு என்ற ரீதியில் இந்தியாவை அனுசரித்துப் போகலாம். பிரதமரின் இந்திய விஜயம் சமாதான முயற்சிக்குப் பெரிதும் உதவும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உதவினால் நாம் வரவேற்போம்.

**டக்ளஸ் தேவானந்தா**
**(ஈ.பி.டி.பி.)**

இந்தியாவின் ஆளுமைக்குட்பட்ட நோர்வே அரசின் பங்களிப்புத்தான் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரும். அந்த யதார்த்த நிலையைப் பிரதமர் புரிந்து கொண்டுள்ளார் என்று நான் கருதுகிறேன்.

**வரதராஜப்பெருமாள்**
**(வரதர் அணி)**

அனைவரும் எதிர்பார்த்ததைவிட ஒருபடி கூடுதலான நம்பிக்கையை ஊட்டியிருக்கின்றன. ரணிலின் இந்திய விஜயமும் இந்தியாவில அலசப்பட்ட விடயங்களும் இலங்கையின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்குத் தேவையான பிரதமரின் முதல் அடி. இது வரலாற்றில் ஒரு பதிவு. இவை நிச்சயம் இன நெருக்கடியைத் தீர்க்க வழிசமைக்கும்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**
**(சுரேஷ் அணி)**

பிரதமர் ரணிலின் இந்திய விஜயம் வரவேற்கத்தக்கது. சமாதான முயற்சிகளில் நோர்வேயின் கையைப் பலப்படுத்த இந்தியா உறுதியளித்திருப்பது வரவேற்கத்தக்கது. (உ)

— ஆயுதப் புதையலைத் தேடி —

## திருமலை பள்ளத்தோட்டப் பகுதி கடற்கரையில் படையினர் சல்லடை

திருகோணமலை நகரை அடுத்துள்ள பள்ளத்தோட்டப் பகுதியில் நேற்றுக் காலைமுதல் பொலீஸார் சுற்றிவளைத்து பெரும் தேடுதலை மேற்கொண்டு வருகின்றனர். இக்கிராமத்தின் கடலோரப்பகுதியில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இத்தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மண் அகழ்ந்து எடுக்கும் கனரக இயந்திரத்தின் உதவியுடன் இந்தக் கிராமத்தின் கடலோரப் பகுதியில் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு ஆயுதங்களைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

உயர் பொலீஸ் அதிகாரிகள் தலைமையில் இந்தத் தேடுதல் நடவடிக்கை ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எனினும் நேற்று மாலைவரையிலும் ஆயுதங்கள் எதுவும் கண்டுபிடிககப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## மழையால் பாதிக்கப்பட்டுள்ள வன்னி மக்களுக்கும் நிவாரணம்

வவுனியா,டிசெ.26

தொடர்ந்து பெய்துவரும் கடும் மழையால் பாதிக்கப்பட்ட வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு உத்தரவிட்டிருக்கிறார் புனர்வாழ்வு, அகதிகள் மீள் குடியமர்வு அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ரெலோவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் விடுத்த அவசர கோரிக்கையை அடுத்தே அமைச்சர் இந்த உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார். (க-3)

# இந்து கலாசார அமைச்சர் குழுவின் திருக்கேதீஸ்வர விஜயம்



திருக்கேதீஸ்வர ஆலயத்தில் பாதுகாப்பாக இருக்கும் தெய்வ விக்கிரகங்கள்



இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனும் அவரது குழுவினரும் கடந்த ஞாயிறன்று திருக்கேதீஸ்வரத்துக்கு விஜயம் செய்தனர். ஆலய வாசலில் அவரும் மன்னார், வவுனியா அரச அதிபர்களும் ஏனையோரும் வரவேற்கப்படும் காட்சியை முதல் படத்திலும், இராணுவ அதிகாரிகள் சகிதம் ஆலயத்தை அவர் சுற்றிப் பார்வையிடுவதை இரண்டாவது படத்திலும் ஆலயத்தினுள் பெரிய சிவலிங்கம் முன்னால் அமைச்சரும் குழுவினரும் நிற்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### புதிய தகவல்களின் அடிப்படையில்

## குமார் கொலை விசாரணையை முன்னெடுக்கக் கோரிக்கை

கொழும்பு,டிசெ.26

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவராக இருந்த குமார் பொன்னம்பலத்தின் கொலை தொடர்பாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ளன. எனவே அத்தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸின் செயலாளர் என்.குமரகுருபரன் பிரதமரைக் கேட்டுள்ளார்.

பிரதமருக்கு அவர் அனுப்பியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குமார் பொன்னம்பலத்தின கொலையின் பின்னணியில் அனுருத்த ரத்வத்தையின் மகனான மகேன் ரத்வத்த இருந்ததாகத் தற்சமயம் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தகவல்களில் உண்மை இருப்பதாகவே நாம் கருதுகின்றோம்.

முன்னரும் இதுபற்றிய தகவல்கள் வெளியாகியபோதும் உயர்மட்டம் அவை பொய்யெனக் கூறிவிட்டது.

தற்சமயம் வெளியாகியுள்ள தகவல்களை வைத்து விசாரணைகளைத் துரிதமாக்கி சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுங்கள் - என்றுள்ளது.

(க-3)

## இந்து கலாசார அமைச்சின் கீழ் பனை அபிவிருத்திச் சபை

கொழும்பு,டிசெ.26

பனை அபிவிருத்திச் சபை விரைவில் இந்து கலாசார அமைச்சின் கீழ் இயங்கவிருக்கின்றது.

இது தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் -

அதன்பின் அச்சபையின் பணிகள் மறுசீரமைக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்து கலாசார அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றுள்ள க.பரமேஸ்வரன் இன்று தமது பொறுப்புக்களை ஏற்கவிருக்கிறார்.

அதேவேளை - வடமாகாண மீள்குடியமர்வு அதிகார சபை புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சின் கீழ் இயங்கும் என்றும் -

சிமெந்துக் கூட்டுத்தாபனம், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்பளம் ஆகியன கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(க-3)

### மின்சார சபையின் புதிய தலைவர்

கொழும்பு,டிசெ.26

மின்சார சபையின் புதிய தலைவராக எம்.ஆர்.பிரேஸியஸ் மின்சக்தி வலு அமைச்சர் கரு ஜயசூரியாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரபல வங்கியாளரான இவர், பல வங்கிகளில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

(க-3)

டிசெம்பர் 31வரை மட்டுமே!
மலிவு விற்பனை
நல்லின ஒட்டு எலுமிச்சை, தோடை, மாங்கன்றுகள், விதை எலுமிச்சங்கன்றுகள், லெமன், லாவுலுக் கன்றுகள், யம்புநாவல் கன்றுகள் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு.
சாதாரண றோசா ஒரு பதிக்கன்று 40/=
தொடர்பு:-
அதிபர்
யாழ். கல்லூரி விவசாய நிறுவனம்
மருதனார்மடம், சுன்னாகம்.
(96299)

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்க்கமான முறையில் பேச்சு நடத்தியதாகக் குறிப்பிட்டார்.

இந்தவிடயத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட இணக்கம் தெரிவித்திருப்பது இலங்கைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்றும் அவர் சொன்னார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பாலம் ஒன்றை அமைப்பது பற்றியும் இந்தியத் தலைவர்களுடன் ஆலோசனை நடத்தப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையே பாலம் அமைப்பது போன்ற செயல்களால் இலங்கையில் பிரிவினைவாதக் கோரிக்கை கைவிடப்படும் சாத்தியம் உண்டு என்று தாம் நம்புவதாகவும் அமைச்சர் பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

அரசு - புலிகள் பேச்சில் நோர்வே அரசின் பங்களிப்புப் பற்றியும் டிரோன பெர்னாண்டோ கருத்துத் தெரிவித்தார்.

நோர்வே அரசைப் பேச்சுக்களில் மத்தியஸ்தம் செய்ய அனுமதிக்கும் நோக்கம் இலங்கை அரசுக்கு இல்லை. தேவை ஏற்படுமாயின் பேச்சுக்கான ஏற்பாட்டாளராகவே நோர்வே அரசு பயன்படுத்தப்படும் என்றும் டிரோன் பெர்னாண்டோ கூறினார்.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் நேரடியாகத் தலையிட இந்தியா இணங்கியிருப்பதாக டிரோன் வெளியிட்ட தகவலை கொழும்பிலிருந்து வெளியாகும் 'சுடர் ஒளி' நாளிதழும் தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளது.

(உ)

எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்
☆ வருகபட்டி மாப்பிள்ளை
☆ லவ்மரீச்
பிரதிகள் உடன் பெறலாம்
எமது பிறமிட் Five star வீடியோ CD வெளியீடுகள்
✪ நந்தா
✪ சாஜகான்
✪ பார்த்தால் பரவசம
✪ ஆண்டான் அடிமை
வீடியோ விமல்
யாழ்ப்பாணம். (C/19953)

### வடமராட்சிப் பிரதேசத்தில்

## தென்னைப் பீடையை கட்டுப்படுத்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள்

வடமராட்சி,டிசெ.26

வடமராட்சிப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் மீது 'மைற்ஸ்' பீடை நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து அந்நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக தென்னை வளர்ப்போர் மத்தியில் கிராம ரீதியாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் தென்னை அபிவிருத்தி ஆராய்ச்சி சபையினரால் நடத்தப்பட்டுவருகின்றன.

புலோலி மத்தி, தும்பளை, மாதனை ஆகிய கிராமங்களில் இக்கருத்தரங்குகள் ஏற்கனவே நடத்தப்பட்டுள்ளன. ஏனைய கிராமங்களில் கருத்தரங்குகளை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

இக்கருத்தரங்குகளில் 'மைற்ஸ்' பீடை நோயைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து தென்னை அபிவிருத்திச் சபை வடபிராந்திய உதவி முகாமையாளர் எஸ்.சிவச்சந்திரன், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சத்தியேந்திரா, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆசிவசுவாமி, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நவமணி ஜெயராசா ஆகியோர் கருத்துரை வழங்கி வருகின்றனர்.

(க-173)

## மணல் கடத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை

### கொடிகாமம் பொலீஸார் அறிவிப்பு

வடமராட்சி,டிசெ.26

வரணி நாவற்காட்டுப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் கடத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென கொடிகாமம் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணல் கடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறும், அப்பகுதியில் இருந்து மணல் அள்ளத் தடைவிதிக்கப்படவேண்டும் எனவும் இப்பகுதி மக்கள் வட பகுதி இராணுவத் தளபதி, வட பிராந்திய பொலீஸ் அத்தியட்சகர், யாழ்.அரசாங்க அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனை அடுத்து இப்பகுதியில் இருந்து மணல் அள்ளப்படுவது, கடத்தப்படுவது சட்டவிரோதமான செயல் என அறிவித்துள்ள கொடிகாமம் பொலீஸார், இதுகுறித்து கிராம அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

(க-173)

### விடுமுறை தினங்களிலும் இயங்குகிறது

விவசாயிகளின் நலன்கருதி வேலணை கமநல கேந்திர நிலையத்தின் செயற்பாடுகள் விடுமுறை தினங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

(க-16)

### விமானத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் -

"அமெரிக்கா, பிரான்ஸ் நாடுகளின் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் புலனாய்வின்படி ரெய்ட், ஸ்ரீலங்கா தேசத்தைச் சேர்ந்தவர் அல்லர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது." - என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

(உ-9)

A/L தமிழ் PAPER (மீட்டல்)
ஈழத்திலக்கிய வரலாறு
நாக.தமிழிந்திரன்
i வியாழன் - 3 - 4
ii. சனி, ஞாயிறு - 2 - 3
வினா விடைகள்
(TUTES)
BEACON
யாழ்.
(96272)

இன்றைய OD/CD வெளியீடுகள்
A.R. ரகுமானின்
★ அல்லி அர்ஜுன்
★ காமராச
★ ஹலோ மாமா
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்.

MOBILE NET
MCS
COMPUTER SERVICES
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
கனிப்பூடான ஆங்கிலம்
பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்கள்வரை
ஆரம்பம் 29.12.2001 (சனிக்கிழமை)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.12.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.